# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 138 — 1974 නොවැම්බර් 15 වැනි සිකුරාදා — 1974.11.15**

138 ம் இலக்கம்—1974 ம் ஆண்டு நவெம்பர் மாதம் 15 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (II அ)—விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 1243 | பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | 1263 |


*கவனிக்க :—அரச ஈட்டு, முதலீட்டு வங்கிச் சட்டமூலம் 1974 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 08 ந் தேதிய இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II ற்குக் குறைநிரப்பியாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.*

## பதவிகள் — வெற்றிடம்

### இலங்கைக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

*1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள்*

*1 : 1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். " இலங்கையர் " என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தில் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.*

*1 : 2 ஏதாவது ஒரு பதவிக்கான வேட்பாளர், அப்பதவிக்கு சிரேட்ட தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அல்லது அதனிலும் உயர்வான பரீட்சையில் சித்தியடைந்திருப்பது ஆகக்குறைந்த கல்வித் தகைமையென விதிக்கப்பட்டிருக்குமிடத்து, சிங்கள மொழி மூலம் கல்வி பயின்ற சிங்களவராக இருப்பின் அவர் சிரேட்ட தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சிங்கள மொழியில் சித்திபடைந்து இருத்தல் வேண்டும். (1961 ஜனவரி 1 க்கு முந்திய ஒரு திகதியிலிருந்து அரச சேவையில் இருப்போருக்கும் அரச சேவையில் உள்ள பிற பதவிகளுக்கு நியமனத்தை நாடும் அத்தகையோருக்கும் இத் தேவை ஏற்புடைத்தாகாது.)*

*1 : 3 விதிக்கப்பெற்ற சிங்கள வினைத்திறமைத்திறன் தேர்வினில் சித்தி எய்தத் தவறியமைக்காக தகுதிகாண் சோதனைக்கான நியமனங்கள் நிறுத்தி வைக்கப்பட்ட " புதிதாகச் சேர்ந்த " அரச உத்தியோகத்தர்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. அப்படி ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமாயின் 640 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றுநிருபத்தின் நியதிகளுக்கமைவாக விதிக்கப்பெற்ற உயர்ந்த சிங்கள வினைத்திறன் தேர்விலிருந்து விலக்களிக்கும் உரிமையை அவர்களுக்குக் கொடுக்கத்தக்க தகைமையை அவர்கள் பெற்றிருத்தல் வேண்டும்.*

*2. படிகள்*

*2 : 1 அரச சேவையில் உள்ள திருமணமான உத்தியோகத்தர்களுக்கு அவர்களது பதவிகளுக்கு ஏற்புடைய திரட்டிய மாத வேதனத்துடன் மேலதிகமாக தாபனக் கோவையின் VIII ஆம் அத்தியாயத்தில் I ஆம் பிரிவில் தரப்பட்டபடி விவாகப் படியும் வழங்கப்படும்.*

*2 : 2 மாத வேதனம் பெறும் அரச உத்தியோகத்தர்கள், அவர்கள் 180 ரூபாவிலிருந்து 250 ரூபா வரையில்*

*முக்கிய அறிவித்தல்*

*இலங்கை குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் வாராந்த அறிவித்தலின் பகுதி I: தொகுதி (II அ) விலும் (II ஆ) விலும் பிரசுரிக்கப்படும் எல்லா அறிவித்தல்களும் அவ்வறிவித்தல்கள் பிரசுரமாகும் வாரத்திற்கு முந்திய புதன்கிழமை நண்பகல் 12.00 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். குறிக்கப்பட்ட திகதிக்கும் நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் யாவும் எதுவித காரணத்தை முன்னிட்டும் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.*

*எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,*
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு,*
*1973 ம் ஆண்டு திசெம்பர் மீ 15 ந் உ.*

(சகல படிகளும் உட்பட) வேதனமாக/கூலியாகப் பெறும் தொகுதியினரைச் சேர்ந்தவராயின், அவர்களுக்கு விசேட படியாக ரூபா 7.50 கொடுக்கப்படும். அது தேவையான விடத்து சரிசெய்யப்படுவதற்கு உள்ளாகும்.

### 3. சேவைநிபந்தனைகள் : பொது

3 : 1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக் களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் விடுக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

3 : 2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தி யோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம். அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத் தப்படல் வேண்டும்.

3 : 3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

### 4. நிரந்தரப் பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர் களுக்கு ஏற்புடைத்தாகும் சேவை நிபந்தனைகள்

4 : 1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத் தர்கள் மேலே 3 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனை களுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :—

4 : 1 : 1 சகல நியமனங்களும், ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கரு தப்பட்டாலொழிய, மூன்று வருடத்துக்குத் தகுதிகாண் நிலையிலேயே இருக்கும். தகுதிகாண் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்தி வைக்கலாம்.

4 : 1 : 2 அரசாங்க சேவையில் "புதிதாகச் சேர்ந்த" அரச உத்தியோகத்தர்கள் யாவரும் அரசாங் கத்தின் அரசகரும மொழிக் கொள்கையின் நோக்கத்துக்காக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் தற்போதுள்ள எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் அல்லது அர சாங்கத்தின் மொழிக் கொள்கைக்கு பயன் ஏற் படும் வண்ணம் இனிமேல் புகுத்தக்கூடிய சட்டங் களுக்கும் விதிகளுக்கும் அமையுமாறு வேண்டப் படுவர்.

4 : 1 : 3 சகல அரச உத்தியோகத்தர்களும், தமது தகுதி காண் காலத்தின்போது அரசகரும மொழியில் வேலை செய்யும் அறிவைப் பெற்றுக்கொள்ளும் படி வேண்டப்படுவர்.

4 : 1 : 4 தகுதிகாண் காலம் நிறைவு எய்திய பின்பு பத வியை உறுதி செய்வது, பிறவற்றுள் நியமனம் செய்யப்பட்ட தேதியிலிருந்து முதலாவது வரு டத்தினுள் முதலாந்தர சிங்கள வினைத்திறன் தேர்வில் சித்தி எய்துவதிலும் இரண்டு வருடத் தினுள் இரண்டாந்தர சிங்கள வினைத்திறன் தேர் வில் சித்தி எய்துவதிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடத்தினுள் மூன்றாந் தரச் சிங்கள வினைத்திறன் தேர்வில் சித்தி எய்துவதிலும் தங்கி யுள்ளது. ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம், விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தி யுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத் தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் சித்தி எய்தும் வரையில் அல்லது 4 : 1 : 5 ஆம் பிரிவின் ஏற்பாடு களுள் ஏற்புடையதாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

4 : 1 : 5 தகுதிகாண் நிலைக்கால முடிவு வரையில் சிங்கள மொழியில் விதிக்கப்பெற்ற வினைத்திறனை அடையாவிட்டால் தாபனக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 12 : 13 ஆம் பிரிவின் ஏற்பாடு கள் பிரயோகமாகும்.

4 : 1 : 6 சிங்கள மொழி மூலம் சேர்த்துக்கொள்ளப்பட்ட வர்கள் மீது 4 : 1 : 3 ஆம் 4 : 1 : 4 ஆம் 4 : 1 : 5 ஆம் பிரிவுகள் பிரயோகிக்கப்படமாட்டா.

4 : 1 : 7 அரச சேவையின், நிரந்தரமான பதவியொன் றில் ஏற்கனவே பதவி உறுதி செய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நிய மிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகாண் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

4 : 1 : 8 தெரிவு செய்யப்பட்ட வேட்பாளர்கள் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பத விகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட் சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்து) தீவின் எந் தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற் றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அறிவதற்கு அவர்கள் அரசாங்க மருத் துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவ பரி சோதனைக்கு உட்படல் வேண்டும்.

### 5. நியமன நியதிகள்

5 : 1 அரச சேவையில், நிரந்தரமான பதவிகளிலாயி னும் மாதச் சம்பளமுள்ள தற்காலிக பதவிகளிலாயினும் 1.1.72 க்குப் பின்பு நியமனம் பெற்ற அரச உத்தியோகத் தர்கள் (நாட் சம்பளம் கொடுக்கப்படுபவர்கள் நீங்கலா) யாவரும் தமது திரட்டிய வேதனத்தின் 6 சத வீதத்தை அரசாங்க சேவைச் சகாய நிதியத்துக்குச் செலுத்துதல் வேண்டும். அரசாங்கம் நிதியாண்டின் இறுதியில் கொடுக் கப்படும் திரட்டு வேதனத்தின் 9 சத வீதத்தைக் கொடுத் துதவும். அத்தகைய பதவியை வகிப்பவர் (அவர் விரும்பி னால்) அவரது மாதத்திரட்டு வேதனத்திலிருந்து 6 சத வீதம் வரையில் அவரது விருப்பப்படி, சேவைச் சகாய நிதி யத்துக்குச் செலுத்தலாம். ஆனால் அத்தகைய உதவு தொகை மீது அரசாங்கம் எந்தவித தொகையும் செலுத் தாது.

5 : 2 1971.12.31 க்கு முன்பு அரச சேவையில் ஓய்வூதிய முள்ள நிரந்தரமான பதவிகளை வகித்த அரச உத்தியோ கத்தர்கள் 1972.1.1 க்குப் பின்பு அச்சேவையில் உள்ள நிரந்தரமான பதவிகளில் நியமிக்கப்பட்டால் அவர்கள் அவர்களது ஓய்வூதிய உரிமைகளை வைத்திருப்பதற்கு அனு மதிக்கப்படுவார். அத்தகைய அரச உத்தியோகத்தர்கள் முன்பு போல விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத் துக்கு பணம் செலுத்துதல் வேண்டும்.

5 : 3 அரச சேவையிலுள்ள ஓய்வூதியத்துக்குரிய நிய மனங்களை 1971.12.31 ஆந் தேதியன்று வகித்தவர்களும் உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்துக்குரிய பதவி களுக்கு நியமிக்கப்படுவதற்காக 1972.01.01 ஆந் தேதியின் பின் விடுக்கப்பட்டவர்களுமான உத்தியோகத்தர்களுக்கும், 1971.12.31 ஆந் தேதியன்று ஓய்வூதியத்துக்குரிய நியமனங் களை உள்ளூராட்சிச் சேவையில் வகித்தவர்களும் அரச சேவையிலுள்ள ஓய்வூதியத்துக்குரிய பதவிகளுக்கு நியமிக் கப்படுவதற்காக 1972.01.01 ஆந் தேதியின் பின் விடுவிக்கப் பட்டவர்களுமான உத்தியோகத்தர்களுக்கும் முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர் களின் பதவிகளில் அவர்களுக்கு மட்டுமுரியதாக ஓய்வூதியத் தகைமை அனுமதிக்கப்படும்.

5 : 4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புக்களின் கீழ் ஓய்வூதியத்துக்குரியவையான அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக 1972.01.01 ஆந் தேதியின் பின் விடுவிக்கப்பட்டவர்களும், 1971.12.31 ஆம் தேதியன்று ஓய்வூதியத்துக்குரித்துடையவர்களாக இருந்தவர்களுமான தரைப் படை, கடற்படை, வான்படை என்பனவற்றின் நிலைப் படை ஆளணியினர்க்கு, அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத் தகைமை அனுமதிக்கப்படும். ஆயினும், அவர்களது தரைப்படை, கடற்படை, வான்படைச் சேவை, ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புக்களின் கீழுள்ள அவர்களது ஓய்வூதியத்துக்குரித்துடைய சேவையுடன் ஓய்வூதியத்துக்காகக் கணக்கில் கொள்ளப்பட மாட்டாது.

### 6. யுத்த சேவைச் சலுகை

6 : 1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப் படைகளில் சேவையாற்றியவர்களும், தியணைக்கும் படை, விமானத் தாக்கப் பாதுகாப்புப் படை, ஊர் பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் முழு நேரக் கடமையாற்றியவர்கள், அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காதுவிடின், 1939 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 3 ஆம் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையில் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம், தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1946 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ஆம் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருந்திருத்தல் வேண்டும்.

### 7. அரச சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள்

7 : 1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்த மட்டில் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

7 : 2 வேட்பாளர்கள் குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாக பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டாது.

7 : 3 ஒரு வேட்பாளரைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். வேட்பாளர் ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய வேட்பாளரைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

7 : 4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவு செய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

7 : 5 விளம்பரத் தேவைகளுக்கு அமைவுபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

### 8. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை

8 : 1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும்; அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

---

## கல்வி அமைச்சு

### பிரதம கல்வி உத்தியோகத்தர் (பண்பாட்டுக் கல்வி) பதவி

கல்வி அமைச்சின் கீழுள்ள பிரதம கல்வி உத்தியோகத்தர் (பண்பாட்டுக் கல்வி) பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள், கீழ்க்காணும் மாதிரிப் படிவ முறையில் தயாரிக்கப்பட்டு "செயலாளர், கல்வி அமைச்சு (கல்விச் சேவைக் கூறு, பொது நிர்வாகக் கிளை) மலாய் வீதி, கொழும்பு 2" என்ற முகவரிக்கு 1074.12.06 அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகப் பதிவஞ்சல் மூலம் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பப்படும் காகித உறையின் இடது பக்க மேல் மூலையில் "பிரதம கல்வி உத்தியோகத்தர் (பண்பாட்டுக் கல்வி) பதவி" எனத் தெளிவாக அடையாளமிடப்பட வேண்டும்.

2. **நியமன நிபந்தனைகளும் சேவை நிபந்தனைகளும்.**—(i) இப்பதவி நிரந்தரமானது. தெரிவு செய்யப்படும் அபேட்சகர் அரச சேவையில் உபகாரச் சம்பள உரித்துடைய பதவி ஒன்றினை ஏற்கனவே வகிக்காவிடின் அரசாங்க சேவை சேமலாப நிதிக்குக் கட்டணம் செலுத்தவேண்டும். தெரிவு செய்யப்படும் அபேட்சகர் அரச சேவையில் அல்லது உள்ளூராட்சிச் சேவையில் உபகாரச் சம்பள உரித்துடைய பதவியை ஏற்கனவே வகிப்பவராயின் அவர் தொடர்ந்து உபகாரச் சம்பள உரிமைகளை அனுபவிப்பர். நியமதாரி, அரச சேவையில் ஏற்கனவே ஒரு பதவியை வகிக்காவிடின் அவர், முதற்கண், மூன்று வருட காலத்துக்குத் தகுதிகாண் முறையில் நியமிக்கப்படுவார். அரச சேவையிலுள்ள நிரந்தர உபகாரச் சம்பள உரித்துடைய உத்தியோகத்தர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டால் அவர் ஒரு வருட காலத்துக்குப் பதில் கடமை புரிபவராக நியமிக்கப்படுவர்.

(ii) ஒரு பதவிக்கு நியமிக்கப்படும் உத்தியோகத்தர் ஒவ்வொருவரும் நியமனத் திகதியிலிருந்து முறையே மூன்று வருட காலத்துக்குள்ளும் ஐந்து வருட காலத்துக்குள்ளும் முதலாவது வினைத்திறமைகாண், இரண்டாவது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சைகளில் சித்தியடைய வேண்டும். வினைத்திறமைகாண் தடைகளை விதிக்கப்பட்ட காலத்துக்குள் பூர்த்திசெய்யத் தவறுமிடத்து வேதன ஏற்றம் பிற்போடப்படும். அனுமதிக்கப்பட்ட காலத்துக்கு மேலதிகமாக எடுக்கப்படும் காலம் வேதன ஏற்றம் பிற்போடப்பட்ட காலமாகக் கருதப்படும். உத்தியோகத்தர்கள், வினைத்திறமைகாண் தடைகளைப் பூர்த்தி செய்யும்வரை, உயர் பதவிகளுக்கு விண்ணப்பித்தற்கும் உரித்திலராவார்.

**முதலாவது வினைத்திறமைகாண் தடை.**—பின்வருவனவற்றிலான ஒரு பரீட்சையைக் கொண்டதாகும் :—

(அ) இலங்கைக் குடியரசுத் தாபனக் கைநூல் விதிகளும் அரசாங்கப் பிரமாணங்களும் ;

(ஆ) கணக்கீட்டு முறை ;

(இ) கல்விச் சட்டம், நிர்வாகம், மேற்பார்வை ;

(ஈ) இரண்டாவது மொழி.

**இரண்டாவது வினைத்திறமைகாண் தடை.**— இரண்டாவது வினைத்திறமைகாண் தடையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு உத்தியோகத்தர் ஓர் உயர் தொழில் தகைமையையேனும் கல்வியிலான ஒரு பட்டப்பின் தகைமையையேனும் பெற வேண்டும். இது, அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் கல்வித் தகுதித் தேர்வுச் சான்றிதழ் அல்லது சமமான தகைமை அல்லது கல்வியிலான சிறப்பு முதுமாணிப் பட்டம் அல்லது கலாநிதிப் பட்டமாக அமையும். கல்வியில் கல்விமாணிப் பட்டம் (க.க) பெற்றுள்ளவர்கள் உயர்தொழில் தகைமையேனும் கல்வியிலான பட்டப்பின் தகைமையையேனும் பெறுவதிலிருந்து விலக்களிக்கப்படுவார்கள்.

3. **சம்பளமும் ஏனைய படிகளும்.**— இப்பதவிக்குரிய திரட்டிய சம்பள அளவுத் திட்டம் பின்வருமாறு :—

ரூபா 11,040—11 × 480—16,320 ; மேலே 2 ஆம் பந்தியில் விதிக்கப்பட்டுள்ள வினைத்திறமைகாண் சேவைகளைப் பூர்த்தி செய்தற்கமைய.

4. **கல்வித் தகைமைகளும் ஏனைய தகைமைகளும்.**—ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பினவரும் தகைமைகள் உடையவர் எனபதற்குத் திருப்தியான சான்று காட்ட வேண்டும் :—

(i) (அ) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகப் பட்டதாரியாக இருக்க வேண்டும்;

(ஆ) சிறந்த ஒழுக்கமும் உடல் நலமும் உடையவராய் இருக்கவேண்டும் ;

(இ) கல்வி அமைச்சின் கீழேனும் கல்வி அமைச்சின் கீழுள்ள ஒரு திணைக்களத்திலேனும் நிலையத்திலேனும், (உதாரணமாக பல்கலைக் கழகங்கள், பல தொழில்நுட்ப நிலையங்கள், ஆசிரியர் கலாசாலைகள் போன்றவற்றில்) வருடாந்தம் ரூபா 11,040 ஐ உச்சப்படியாகக் கொண்ட திரட்டிய சம்பள அளவுத்திட்டம் கொண்ட ஒரு பதவியை வகிப்பவராகவும் அப்பதவியில் உறுதிப்படுத் தப்பட்டவராகவும் இருக்கவேண்டும் ;

(ஈ) பாட்டுகள் அமைத்தல், வரைதல், நாடகம் எழுதல், நாடகம் தயாரித்தல், சலனப் படங்கள் நெறிப்படுத்தல், சலனப்பட சம்பாஷணை, சலனப்படப் பாட்டுகள் அமைத்தல், இலக்கிய நூல்கள் எழுதுதல் போன்ற பல்வேறு கலைத்துறைகளில் அனுபவமும் தேர்ச்சியும் பெற்றுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(ii) **வயதுக் கட்டுப்பாடு.**—30 வயதுக்குக் குறையாதவராயும் 45 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். (அரசாங்கத்தின் கீழ் ஏற்கனவே நியமனங்கள் வகிப்பவர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது).

**குறிப்பு.**—மேலே (அ) ஆம், (இ) ஆம் பிரிவுகளின் கீழ் குறிப்பிட்டுள்ள வேண்டிய தேவைகள் பூரணப்படுத்தப்படின், சி. பா. த. பத்திரப் பரீட்சையில் அல்லது கணிதம்/எண்கணிதம், சிங்கள/தமிழ் மொழி ஆகியவை உட்பட ஆறு பாடங்களில், இரு தடவைகளுக்கு மேற்படாது தோற்றி க. பொ. த. (சாதாரணதர) பத்திரப் பரீட்சையில் சித்தியடைந்துள்ள அபேட்சகர்கள் பட்டத் தகைமையைப் பெற்றிராவிடினும் மனையியல் வாணிகவியல், நடனம், கீழைத்தேய சங்கீதம், மேல்நாட்டுச் சங்கீதம், கைப்பணி, உடற்கல்வி, சித்திரம் ஆகிய பாடங்களிலான பதவிகளுக்கு மாத்திரம் சேர்த்துக்கப்படுவர்.

5. வேண்டப்படும் நேரத்தில் அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எவற்றையேனும் எல்லாவற்றையேனும் சமர்ப்பிக்க வேண்டும் :—

(அ) பிறப்புச் சாட்சிப்பத்திரம் (மு.கு. ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கான ஒழுங்குச் சட்டங்களின் நோக்கத்திற்கென கொடுபடும் பிறப்புப் சாட்சிப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).

(ஆ) பட்டப் பரீட்சைப் பத்திரம் அல்லது கல்வித் தராதரப் பத்திரம் ;

(இ) குணச் சான்றிதழ் இரண்டு. இவற்றிலொன்று பாடப் பணிப்பாளர் கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாக இருக்க வேண்டும் ;

(ஈ) உயர்தொழில் பற்றிய சான்றிதழ்கள் ;

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைப் பத்திரம்.

**குறிப்பு.**—(1) சாதனங்களையாயினும் சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது ;

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்பட மாட்டா.

6. அரச சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தத்தம் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்பட வேண்டும். விதிக்கப்பட்டுள்ள திகதிக்குப் பின் பெற்றுக்கொள்ளப்படும் அத்தகைய விண்ணப்பம் எதுவும், அது விதிக்கப்பட்ட திகதிக்கு முன் சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவரால் பெற்றுக்கொள்ளப்பட்டு தாமதத்துக்குத் தகுந்த காரணங்களைக் காட்டி அதனை ஏற்றுக்கொள்ளுமாறு அவர் சிபார்சு செய்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

7. விண்ணப்பமேனும் அது சம்பந்தமான வேறு எக்கடிதமேனும் கல்வி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்பட வேண்டுமேயன்றி இவ்வமைச்சிலுள்ள எந்த உத்தியோகத்தரின் சொந்த முகவரிக்கும் அனுப்பப்படலாகாது

8. அரச சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்கு அமைபவையும் இவ்வர்த்தமானியில் முற்பகுதியில் I ஆம் பகுதி (IIஅ) ஆம் பிரிவில் பிரசுரிக்கப்பட்டுள்ளவையுமான பொது நிபந்தனைகளுக்கும் 12.10.1971 ஆந் திகதிய 14,979/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளதுமான இலங்கைக் கல்விச் சேவை விளக்கப் பிரமாணத்துக்கும் பின்னர் அதற்குச் செய்யப்பட்ட திருத்தங்களுக்கும் கவனம் கோரப்படுகிறது.

9. விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டமைபற்றி அறிவிக்கப்படும்.

தொடரெண் : பொ.நி/27/161,
கல்வி அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2.
1974 ம் ஆண்டு நவம்பர் மீ 06 ந் தி.

பதில் செயலாளர்,
கல்வி அமைச்சு.

**மாதிரி விண்ணப்பப் படிவம்**

($8\frac{1}{2}'' \times 13\frac{1}{2}''$ அளவு அரைத்தாள்களில் தயாரிக்கப்பட வேண்டியது)

**பிரதம கல்வி உத்தியோகத்தர் (பண்பாட்டுக் கல்வி) பதவி**

1. பெயர் (முதலெழுத்துக்களுடன்) திரு./திருமதி/செல்வி :————.
2. முழுப்பெயர் :————.
3. உத்தியோக முகவரி :————.
4. சொந்த முகவரி :————.
5. (அ) இலங்கையரா? :————.
   (ஆ) அங்ஙனமாயின், வம்சாவழி காரணமாகவா பதிவு காரணமாகவா? :————.
6. பிறந்த திகதி—வருடம் :————. மாதம் :————. நாள் :————.
7. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியன்றுள்ளபடி சரியான வயது :—
   வருடம் :————. மாதம் :————. நாள் :————.

8. தற்போதைய பதவி பற்றிய விபரங்கள்—

(அ) பதவி :————

(ஆ) நிரந்தரமா? தற்காலிகமா? :————.

(இ) உபகாரச்சம்பள உரித்துடையதா அற்றதா? :————.

(ஈ) பதவியில் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறீரா? :————.

(உ) திணைக்களம் :————.

(ஊ) நிலையம்/வேலை இடம் :————.

(எ) திரட்டிய வருடாந்தச் சம்பள அளவுத் திட்டம் :————.

(ஏ) திரட்டிய வருடாந்தச் சம்பள அளவுத் திட்டத்திலான தற்போதைய படி :————.

9. கல்வித் தகைமைகள் பற்றிய விபரங்கள்—(சிங்களத்தில் பெற்றுள்ள தேர்ச்சி/தமிழில் பெற்றுள்ள தராதரப் பத்திர விபரங்கள் உட்பட)—

| பரீட்சை | வருடம் | பாடங்கள் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |

10. உயர்தொழில் தகைமைகள் பற்றிய விபரங்கள்—

| தராதரப் பத்திரம் | வழங்கியவர் | வருடம் | பாடங்கள் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |

11. பொதுக் கல்விகற்ற நிலையங்கள்—

| நிலையம் | வகுப்பு | தொடக்கம் | வரை |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |
| 6. | | | |
| 7. | | | |

12. உயர்தொழில் கல்விகற்ற நிலையங்கள்—

| நிலையம் | பின்பற்றிய பயிற்சி நெறி | தொடக்கம் | வரை |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |

13. முன்னைய நியமனங்கள் (காலவாரன் ஒழுங்கில் சுருக்கமாகக் கொடுபடவேண்டியது)—

| திணைக்களம் | நிலையம்/வேலை இடம் | பதவி | நிரந்தரமா தற்காலிகமா | தொடக்கம் | வரை |
|---|---|---|---|---|---|
| 1. | | | | | |
| 2. | | | | | |
| 3. | | | | | |
| 4. | | | | | |
| 5. | | | | | |
| 6. | | | | | |

14. சட்டமுறை நீதிமன்றத்தில் யாதேனும் குற்றவியல் தவறுக்காக யாதேனும் குற்றத்தீர்ப்பு உம்மீது அளிக்கப்பட்டதா? (அங்ஙனமாயின் விபரங்களைக் கொடுக்கவும்) :————.

15. அரசாங்க சேவையில்/சபையில்/ கூட்டுத்தாபனத்தில் இருந்து விலகியிருந்தால் காரணம் :————.

16. விண்ணப்பதாரி பணமுட்டு அற்றவரா? பணமுட்டு இருப்பின் எவ்வளவுக்கு :————.

இவ்விண்ணப்பப் படிவத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதியளிக்கின்றேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் நியமனத்திற்குப் பின்னராயின் எவ்வித நட்டஈடுமின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் என அறிவேன்

திகதி :————

————
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

11-580—15.11.74 ந் திகதிய வர்த்தமானி இல. 188

## நீதிச்சேவைகள் ஆலோசனைச் சபை

### காதியின் பதவி

1965 ஆம் ஆண்டின் 1 ஆம், 1969 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் செய்சட்டங்களினாற் திருத்தப்பட்டவாறான (115 ஆம் அத்தியாயமான) முஸ்லீம் விவாக, விவாகநீக்கச் சட்டத்தின் கீழ் கொழும்பு மாநகரின் கும்பனித்தெரு, உணுப்பிட்டி, வேக்கந்த, கறுவாத்தோட்டம், கொள்ளுப்பிட்டி, பம்பலப்பிட்டி, கவலொக்ரவுண், திம்பிரிகசாய, வெள்ளவத்தை வடக்கு, வெள்ளவத்தை தெற்கு ஆகிய மாநகர வட்டாரங்களையும், கொட்டா ரோட்டிலுள்ள சுதேச வைத்தியக் கல்லூரியும் வைத்தியசாலையும் ஆகியவற்றிற்குக்கிட்ட ஆரம்பித்து பத்தரமுல்ல வழியாக தலங்கமவடக்கு, மாலபே, கோகந்தர, அத்துருகிரிய, பனுகொட, கொடகம, மீகொட என்பவற்றிற்கு ஊடாகச் சென்று பாதுக்கையில் முடிவடையும் பொதுவேலைப்பகுதி வீதிக்குத் தெற்கேயுள்ள பிரதேசத்தைக் கொண்டதும் 01.01.1974 க்கு முன்னர் இருந்ததுமான நீதிபரிபாலன மாவட்டத்தைச் சேர்ந்த அந்தப்பாகத்தின் (கொழும்பு தெற்கு) காதியின் பதவிக்கு நியமிக்கப்படுவதற்கென நீதிச்சேவைகள் ஆலோசனைச் சபையினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

2. விண்ணப்பதாரிகள் ஆண் முஸ்லீம்களாகவும், இலங்கைப் பிரஜைகளாகவும், முப்பத்தைந்து வயதிற்குட்படாதவர்களாகவும், நல்ல ஒழுக்கமும் நல்ல நிலையிலும் உள்ளவர்களாகவும் இருக்க வேண்டும்.

3. அமைச்சரவையினால் தெரியப்படுபவர், நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்படும் ஒரு காலவெல்லைக்கு நியமிக்கப்படுவர்.

4. ஒரு காதி எப்பிரதேசத்திற்கென நியமிக்கப்படுகிறாரோ அவர் அப்பிரதேசத்திலேயே வசிக்கக் கடப்பாடுடையர்.

5. விண்ணப்பங்கள் என்னிடமிருந்து பெறக்கூடிய விசேட படிவங்களில் செய்யப்படுதல் வேண்டும். அவை 1974 டிசம்பர் 13 ஆம் திகதிக்கு முன்னதாக இந்த அலுவலகத்தைச் சேர்தல் வேண்டும்.

டி. ஜீ. ஜயவந்,
செயலாளர்,
நீதிச்சேவைகள் ஆலோசனைச்சபை.

நீதிச்சேவைகள் ஆலோசனை, ஒழுக்காற்றுச்
சபைகள் அலுவலகம்,
தபாற்பெட்டி 573,
கொழும்பு 12,
05 நவம்பர், 1974.

11—548—15.11.74 ந் திகதிய வர்த்தமானி இல. 138

---

## இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவை

### வகுப்பு III தரம் I இல் உள்ள பதவிகள்

இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையில் உள்ள மேற்குறித்த பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழே தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தில் அமைக்கப்பட வேண்டிய விண்ணப்பங்கள், பிரதி ஆணையாளர் (ஒழுங்கமைப்பு) உள்நாட்டு இறைவரித் திணைக்களம், புதிய செயலகம், கொழும்பு 1 என்ற முகவரிக்கு 1974 டிசெம்பர் 16 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன் அனுப்பப்படுதல் வேண்டும்.

2. வேதனத் திட்டம்
மேற்குறித்த பதவிகளுக்கான வேதனத் திட்டம் ஆண்டொன்றிற்கு ரூபா 6,720—12 × 360—7 × 480—ரூபா 14,400 (யாவும் உட்பட) ஆகும்.

3. தகைமை
உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் 6 ஆண்டுச் சேவையை நிறைவு செய்துள்ள பொது எழுதுவினைஞர் சேவையின் வகுப்பு I ஐச் சேர்ந்தவரும்—

(அ) 1974 ஆகஸ்ட் 1 ஆந் திகதியில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற் கடமையாற்றியவரும், அல்லது

(ஆ) 1974 ஆகஸ்ட் 1 ஆந் திகதிக்கு நேர்முந்திய இரு ஆண்டுக் காலப்பகுதியுள் எத்திகதியிலாவது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற் கடமையாற்றியவரும்,

ஆகிய உத்தியோகத்தர்கள் விண்ணப்பிக்கத் தகுதி கொண்டவர்களாவர்.

4. நியமனத்தின் நியதிகளும் நிபந்தனைகளும்

(i) உத்தியோகத்தர் தெரிவிற்குத் தகுதியானவர் என்ற ஆணையாளரின் நற்சான்றிதழின் அடிப்படையில் மேற்குறித்த தாரத்திற்கான தெரிவு அமையும். சேவைப் பதிவுச் சுவடிகளுக்கு உரிய முக்கியத்துவம் வழங்கப்பட்டு ஆரம்ப நிலைப் பரீட்சை ஒன்றின் அடிப்படையில் இச்சான்றிதழ் வழங்கப்படும்.

(ii) தெரிவு செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் அத்தாரத்தின் 2 ஆண்டுச் சேவைக்காலத்துள், சேவைப் பதிவுச் சுவடிகளுக்கு உரிய முக்கியத்துவம் வழங்கப்பட்டு தகைமை பெறும் பரீட்சை ஒன்றின் அடிப்படையில் உறுதி செய்யப்படுவர். இத்தாரத்தில் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் இரண்டு ஆண்டுகளை அத்தாரத்தில் நிறைவு செய்ததும் உறுதிப்படுத்தப்படாதவிடத்து தமது முன்னைய சேவைகளுக்குத் திரும்பி அனுப்பப்படுவர்.

(iii) இவ்வர்த்தமானியின் பகுதி I பிரிவு (IIஅ) இன் ஆரம்பத்தில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சேவைப் பதவி நியமனங்களுக்குரிய பொது நிபந்தனைகளுக்குக் கவனம் கோரப்படுகின்றது.

டி. ஏ. சுறே,
செயலாளர்,
நிதி அமைச்சு.

நிதி அமைச்சு,
செயலகம்,
கொழும்பு 1,
6.11.1974.

அலுவலகப் பாவனைக்கு :
தொடர்பு இல :

### மாதிரிப் படிவம்

### இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவை

### வகுப்பு III தரம் I இற்கு நியமனத்திற்கான விண்ணப்பம்

1. முழுப் பெயர் :————.
(தனி எழுத்துக்களில்—முதற்பெயரின் கீழ் கோடிடவும்)

2. நிரந்தர அஞ்சல் முகவரி :————.

3. அலுவலக முகவரி :————.

(உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் தற்போது வேலை செய்யும் உத்தியோகத்தர்கள் தமது பிராந்தியப் பணிமனை/உறுப்பு அல்லது கிளையைக் குறிப்பிடவும்)

4. பிறந்த திகதி :————.

5. எழுதுவினைஞர் சேவையைச் சேர்ந்த திகதி :————.

6. வகுப்பு I இற்கு நியமனம் பெற்ற திகதி :————.

7. தற்போதைய வேதனமும் வேதனத் திட்டமும் :————.

8. உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் மொத்தமாகச் சேவை ஆற்றிய காலம் :————.

(அ) ————ஆண்டுகள்————மாதங்கள்

(ஆ) ————இல் இருந்து————வரை
————இல் இருந்து————வரை

என்னால் மேற்தரப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இவ்விபரங்களில் யாதேனும் பிழையானவை அல்லது சரியற்றவை எனக் காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் நியமனத்திற்குப் பின்னராயின் எவ்வித நஷ்டஈடுமின்றி விலக்கப்படுதற்கும் ஆளாவேன் என்பதை உணர்ந்துள்ளேன்.

————,
விண்ணப்பதாரியின் ஒப்பம்.

திகதி :————.

உள்நாட்டு இறைவரி ஆணையாளர் அதிபதி,
உள்நாட்டு இறைவரித் திணைக்களம்,
புதிய செயலகம்,
கொழும்பு 1.

மேலேயுள்ள விடயங்கள் 4, 5, 6, 7, 8 ஆகியன சரியானவை என உறுதிப்படுத்துகின்றேன்.

————,
திணைக்களத் தலைவர்.

திகதி :————.

11—528—15.11.74 ந் திகதிய வர்த்தமானி இல. 138

## இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவை

### வகுப்பு III தரம் III இலும் வகுப்பு III தரம் IIஇலும் உள்ள பதவிகள்

இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையின் உள்ள மேற்குறித்த பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழே தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தில் அமைக்கப்பட வேண்டிய விண்ணப்பங்கள், ஆணையாளர் (ஒழுங்கமைப்பு), உள்நாட்டு இறைவரித் திணைக்களம், புதிய செயலகம், கொழும்பு 1 என்ற முகவரிக்கு 1974 டிசம்பர் 16 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன் அனுப்பப்படுதல் வேண்டும்.

2. வகுப்பு III தரம் III

(i) வேதனத் திட்டம்

மேற்குறித்த பதவிகளுக்கான வேதனம் ஆண்டொன்றிற்கு ரூபா 3,900—15 × 180—ரூபா 6,600 (யாவும் உட்பட) ஆகும்.

(ii) தகைமை

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் குறைந்த பட்சம் தொடர்ச்சியாக மூன்று ஆண்டுச் சேவையை நிறைவு செய்துள்ள பொது எழுதுவினைஞர் சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தரும்,

(அ) 1974 ஆகஸ்டு 01 ஆந் திகதியில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற் கடமையாற்றியவர்களும், அல்லது

(ஆ) 1974 ஆகஸ்டு 01 ஆந் திகதிக்கு நேர்முந்திய இரு ஆண்டு காலப் பகுதியிலுள்ள எத்திகதியிலாவது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் கடமையாற்றியவர்களும்

ஆகிய உத்தியோகத்தர்கள் விண்ணப்பிக்கத் தகுதிகொண்டவர்களாவர்.

ஆ. வகுப்பு III தரம் II

(i) வேதனத் திட்டம்

மேற்குறித்த பதவிகளுக்கான வேதனம் ஆண்டொன்றிற்கு ரூபா 5,520—5 × 240—10 × 360—ரூபா 10,320 (யாவும் உட்பட)

(ii) தகைமை

1974 ஆகஸ்டு 01 ஆந் திகதியில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற் கடமையாற்றியவரும் பொது எழுதுவினைஞர் சேவையைச் சேர்ந்தவரும் அல்லது 1974 ஆகஸ்டு 01 ஆந் திகதிக்கு நேர் முந்திய 2 ஆண்டு காலப் பகுதியுள் எத்திகதியிலாவது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற் கடமையாற்றியவரும்,

(அ) வகுப்பு I ஐச் சேர்ந்தவரும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற் குறைந்த பட்சம் தொடர்ச்சியாக 3 ஆண்டுச் சேவையை நிறைவு செய்துள்ளவரும், அல்லது

(ஆ) வகுப்பு II பிரிவு 'அ'வைச் சேர்ந்தவரும், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திலும் இத்தரத்திலும் 6 ஆண்டுச் சேவையை நிறைவு செய்தவரும்

ஆகிய உத்தியோகத்தர்கள் விண்ணப்பிக்கத் தகுதி கொண்டவர்களாவர்.

3. நியமன நியதிகளும், நிபந்தனைகளும்

(i) உத்தியோகத்தர் தெரிவிற்குத் தகுதியானவர் என்ற ஆணையாளரது நற்சான்றிதழின் அடிப்படையில் மேற் குறித்த தரங்கள் எவற்றிற்குமான தெரிவுகள் அமையும். சேவைப் பதிவுச் சுவடிகளுக்கு உரிய முக்கியத்துவம் வழங்கப்பட்டு ஆரம்ப நிலைப்பரீட்சை ஒன்றின் அடிப்படையில் இச்சான்றிதழ் வழங்கப்படும்.

(ii) தெரிவு செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் அத்தரத்தில் 2 ஆண்டுச் சேவைக் காலத்துள், சேவைப் பதிவுச் சுவடிகளுக்கு உரிய முக்கியத்துவம் வழங்கப்பட்டு தகைமை பெறும் பரீட்சை ஒன்றின் அடிப்படையில் உறுதி செய்யப்படுவர். இத்தரத்தில் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் இரண்டு ஆண்டுகளை அந்தரத்தில் நிறைவு செய்ததும் உறுதிப்படுத்தப்படாதவிடத்து தமது முன்னைய சேவைகளுக்குத் திருப்பி அனுப்பப்படுவர்.

(iii) இவ்வர்த்தமானியின் பகுதி I பிரிவு (II அ) இன் ஆரம்பத்தில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சேவைப் பதவி நியமனங்களுக்குரிய பொது நிபந்தனைகளுக்கு கவனம் கோரப்படுகின்றது.

சு. சிவப்பிரகாசம்,
உள்நாட்டு இறைவரி ஆணையாளர்
அதிபதி.

உள்நாட்டு இறைவரித் திணைக்களம்,
புதிய செயலகம்,
கொழும்பு 1.
திகதி : 6.11.1974.

ஓ—3 ც

அலுவலக பாவனைக்கு

தொடர்பு இல :

#### மாதிரிப் படிவம்

இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவை

வகுப்பு III இற்கு நியமனம் பெறுவதற்கான விண்ணப்பம்

1. நியமனம் கோரும் தரம் :————.

2. முழுப் பெயர் :————.
(தனி எழுத்துக்களில்—முதற்பெயரின் கீழ் கோடிடவும்)

3. நிரந்தர அஞ்சல் முகவரி :————.

4. அலுவலக முகவரி :————.
(உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் தற்போது வேலை செய்யும் உத்தியோகத்தர்கள் தமது பிரதான நியப் பணிமனை/உறுப்பு அல்லது கிளையைக் குறிப்பிடவும்)

5. பிறந்த திகதி :————.

6. எழுதுவினைஞர் சேவையைச் சேர்ந்த திகதி :————.

7. எழுதுவினைஞர் சேவையில் கொண்டுள்ள வகுப்பு/வகுப்பும் பிரிவும் :————.

8. உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் சேவையாற்றிய காலம் :————.

(அ) மொத்தச் சேவைக் காலம்
.........ஆண்டுகள்.........மாதங்கள்

(ஆ) தொடர்ச்சியான சேவைக் காலம்
............ இல் இருந்து ............ வரை
............ இல் இருந்து ............ வரை
............ இல் இருந்து ............ வரை

(இ) பொது எழுதுவினைஞர் சேவையின் வகுப்பு II பிரிவு 'அ' வில் சேவை ஆற்றிய காலம் (பொருத்தமாயின்) :————.

9. தற்போதைய வேதனமும் வேதனத் திட்டமும் :————.

என்னால் மேற்தரப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இவ் விபரங்களில் யாதேனும் பிழையானவை அல்லது சரியற்றவை எனக் காணப்படின், தெரிவு செய்யப்படுவதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுவதற்கும் நியமனத்துக்குப் பின்னராயின் எவ்வித நஷ்ட ஈடுமின்றி விலக்கப்படுவதற்கும் ஆளாவேன் என்பதை உணர்ந்துள்ளேன்.

————
விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி :————.

உள்நாட்டு இறைவரி ஆணையாளர் அதிபதி,
உள்நாட்டு இறைவரித் திணைக்களம்,
புதிய செயலகம்,
கொழும்பு 1.

மேலேயுள்ள விடயங்கள் 5, 6, 7, 8, 9 ஆகியன சரியானவை என உறுதிப்படுத்துகின்றேன்.

————
திணைக்களத் தலைவர்.

திகதி :————.

11-529—15.11.74 ந் திகதிய வர்த்தமானி இல. 133

## கல்வி அமைச்சு

### உலோக வேலை சிரேட்ட போதனாசிரியர் பதவிகள்

கல்வி அமைச்சின் கீழுள்ள தொழில்நுட்பக் கல்வி நிலையங்களில் உலோக வேலை சிரேட்ட போதனாசிரியர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன. விண்ணப்பங்கள், கீழ்க்காணும் மாதிரிப் படிவ முறையில் தயாரிக்கப்பட்டு 1974 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 6 ஆந் திகதி அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக "செயலாளர் (பொது நிர்வாகக் கிளை,) கல்வி அமைச்சு, மலாய் வீதி, கொழும்பு 2" எனும் விலாசத்துக்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பப்படும் காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "உலோக வேலை சிரேட்ட போதனாசிரியர் பதவி" எனத் தெளிவாக எழுதப்பட வேண்டும்.

2. **நியமன நிபந்தனைகளும் சேவை நிபந்தனைகளும்.**—இப்பதவிகள் நிரந்தரமானவை. தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள், நிரந்தரமானதும் உபகாரச் சம்பள உரித்துடையதுமான ஒரு பதவியை ஏற்கனவே வகிக்காவிடின் அரசாங்க சேவை சேமலாப நிதிக்கு தமது சம்பளத்தில் 6%த்தைச் செலுத்த வேண்டும். இதற்கு அரசாங்கத்தின் உதவு தொகை 9% ஆகும். நிரந்தரமானதும் உபகாரச் சம்பள உரித்துடையதுமான பதவி ஒன்றினை ஏற்கனவே வகிக்கும் ஓர் உத்தியோகத்தர் தெரிவு செய்யப்படின் உபகாரச் சம்பளத்துக்கான அவரது உரிமைகள் பாதுகாக்கப்படும். புதிதாகச் சேர்க் கப்படுபவர்களைப் பொறுத்தளவில் அவர்களின் நியமனம் மூன்று வருட காலத்து சூத் தகுதிகாண் முறையிலும், நிரந்தரமானதும் உபகாரச் சம்பள உரித்துடையதுமான பதவியை ஏற்கனவே வகிப்பவர்களைப் பொறுத்தளவில் அவர்களின் நியமனம் ஒரு வருட காலத்துக்குப் பதில் கடமை முறை யிலும் அமையும்.

3. **தகவுத்திறன்.**—விண்ணப்பதாரிகள் ஒவ்வொருவரும் பின்வரும் தகைமை உடையவரெனத் திருப்தியான சான்று காட்டவேண்டும் :—

(i) 6.12.74 அன்று 30 வயதுக்குக் குறையாதவராயும் 45 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும்.(ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ளவர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது) ;

(ii) சிறந்த ஒழுக்கமும் தேகாரோக்கியமும் உடையவராய் இருக்க வேண்டும் ;

(iii) பின்வரும் கல்வித் தகைமைகளுள் யாதேனும் ஒன்றைப் பெற்றிருக்க வேண்டும் :—

(அ) சி. பா. த. பத்திரம் ;

(ஆ) க. பொ. த. (சா. த) பத்திரப் பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாது தோற்றி, சிங்கள/தமிழ் மொழி, எண்கணிதம்/ கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தி ;

(இ) சமமான அல்லது உயர்ந்த பரீட்சையில் சித்தி ; ,

(iv) போதிய செயல்முறை/கற்பித்தல் அனுபவம் அல்லது இவ்விரு வகையினதான அனுபவம் (கீழேயுள்ள 5 ஆம் பந்தியைப் பார்க் கவும்) ;

(v) சிங்களத்தில் கற்பிக்கக்கூடியவராய் இருக்க வேண்டும் அல்லது நியமனத் திகதியிலிருந்து 3 வருட காலத்துக்குள் சிங்களத்தில் கற்பித்தற்கான தேர்ச்சி பெறவேண்டும்.

4. **உயர்தொழில் தகைமைகள்.**—பின்வரும் உயர்தொழில் தகைமைகளுள் யாதேனும் ஒன்றையேனும் பெற்றிருக்க வேண்டும் :—

(அ) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியால் வழங்கப்படும் கனிட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர் (பொறிமுறை, மின்சார எந்தி ரவியல்) சான்றிதழ் ;

(ஆ) கல்லோயா அபிவிருத்திச் சபை தொழில்நுட்பப் பயிற்சி நிலையத்தால் வழங்கப்படும் தராதரத் தேர்வு (பொறிமுறை எந்திரவியல்) சான்றிதழ் ;

(இ) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியால், மூன்று வருட மாலை நேரப் பயிற்சியின் பின் வழங்கப்படும் எந்திரவியல் சான்றிதழ் ;

(ஈ) லண்டன் சிற்றி அன்ட் கில்ட்ஸ் நிலையத்தால் பொறிக்கள எந்திரவியலில் வழங்கப்படும் இறுதிச் சான்றிதழ் ;

(உ) சமமான அல்லது உயர்ந்த உயர்தொழில் தகைமைகள் ;

(ஊ) ஒரு தொழில்நுட்பக் கல்வி நிலையத்தில் உலோக வேலைப் போதனாசிரியராக 5 வருட திருப்திகரமான சேவை.

**குறிப்பு.**—தொழில்நுட்ப நிலையங்களில் ஏற்கனவே போதனாசிரியர்களாக நியமனங்கள் வகிப்பவர்களுக்கு, மேற்குறித்த தகைமைகளை அவர்கள் பெற்றிருத்தற்கமைய முன்னுரிமை வழங்கப்படும்.

5. **சம்பள அளவுத் திட்டம்.**—இப்பதவிக்குரிய திட்டிய வருடாந்தச் சம்பள அளவுத் திட்டம் ரூபா 6,600—180 × 8, 240 × 2, 360 × 7—11,040 ஆகும். 10 வருடத்துக்குக் குறைந்த அனுபவம் பெற்றுள்ள விண்ணப்பதாரி ஒருவர் தெரிவு செய்யப்படுமிடத்து, வேண்டிய அனுபவத்தைப் பெறும் வரை பதில் கடமை புரிபவராக திட்டிய மாறுத வருடாந்தச் சம்பளம் ரூ. 6,600 உடன் நியமிக்கப்படுவார். (1.10.69க்கு முன்னரான ஒத்த சம்பள அளவுத் திட்டம் பின்வருமாறு.—ரூ. 3,900—180 × 9—360 × 8—8,400).

6. அரசினர் சேவையிலுள்ள, தகைமையுடைய அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் தத்தம் பகுதித் தலைவர்கள் மூலம் அனுப்பப்பட வேண்டும். விதிக்கப்படும் திகதிக்குப் பின்னர் பெற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. விதிக்கப்படும் திகதிக்குப் பின் இக்காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளப்படும் எவ்விண்ணப்பமும் விதிக்கப்பட்ட திகதியன்று அல்லது அதற்கு முன்னர் அவை உரிய பகுதித் தலைவரால் பெற்றுக்கொள்ளப்பட்டனவென்றும், நியாயமான காரணங்களைக் காட்டி அவற்றை ஏற்றுக்கொள்ளுமாறு அவர் சிபார்சு செய்தாலு மன்றி ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. எனினும், ஒவ்வொரு விண்ணப்பதாரியும் விண்ணப்பத்தின் ஒரு பிரதியை விதிக்கப்படும் திகதிக்கு முன் இவ்வமைச்சுக்கு நேரே அனுப்ப வேண்டும்.

7. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களுடன் பின்வரும் சாதனங்களின் பிரதிகளை (மூலப் பிரதிகளையல்ல) இணைத்தனுப்பவேண்டும்:—

(அ) பிறப்புச் சான்றிப்பத்திரம் (மு. கு.—சமயதி கைச் சான்றிதழ் அல்லது உதவிநன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது) ;

(ஆ) கல்வித் தராதரப் பத்திரங்கள் ;

(இ) உயர்தொழில்/தொழில்நுட்பத் தராதரப் பத்திரங்கள் ;

(ஈ) விண்ணப்பதாரியின் தகைமைகள், ஒழுக்கம், இப்பதவிக்கு நியமிக்கப்படுதற்கான அவருடைய தகுதி ஆகியவற்றைக் குறிப்பிடும் மூன்று சமீபகால நற்சான்றிப் பத்திரங்கள் (அரசினரின் கீழ் ஏற்கனவே சேவையிலுள்ளவர்களைப் பொறுத்தளவில் இவை சமர்ப் பிக்கப்பட வேண்டியதில்லை).

8. விண்ணப்பங்களும் ஏனைய உரிய சாதனங்களேனும் கடிதங்களேனும் இவ்வமைச்சின் செயலாளரின் உத்தியோக முகவரிக்கே அனுப்பப் படவேண்டும் ; எக்காரணத்தைக் கொண்டும் அவை எவ்வுத்தியோகத்தரினதும் சொந்தப் பெயருக்கு அனுப்பப்படலாகா.

9. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியில் I ம் பகுதி (II அ)ம் தொகுதியில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

தொடர் எண் : பொ. நி. 8/:57
பொது நிர்வாகக் கிளை,
கல்வி அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு 2,
1974 ம் ஆண்டு நொவெம்பர் மீ 06 ந் உ.

இ. பாஸ்கரலிங்கம்,
பதிற் செயலாளர்,
கல்வி அமைச்சு.

(மாதிரி விண்ணப்பப் படிவம்)

(8½" × 13½" அளவு அரைத்தாள்களில் தயாரிக்கப்பட வேண்டியது).

கல்வி அமைச்சின் கீழுள்ள தொழில்நுட்பக் கல்வி நிலையங்களில்

உலோக வேலை சிரேட்ட போதனாசிரியர் பதவி

1. பெயர் (முதலெழுத்துக்களுடன்) : திரு./திருமதி/செல்வி :————.

2. முழுப்பெயர் : ————.

3. உத்தியோக முகவரி : ————.

4. சொந்த முகவரி : ————.

5. (அ) இலங்கையரா ? : ————.
(ஆ) அங்ஙனமாயின், வம்சாவழி காரணமாகவா பதிவு காரணமாகவா : ————.

6. பிறந்த திகதி :— வருடம் : ————. மாதம் : ————. நாள் : ————.

7. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியன்றுள்ளபடி சரியான வயது :— வருடம் : ————. மாதம் : ———— நாள் : ————.

8. தற்போதைய பதவி பற்றிய விபரங்கள் :—
(அ) பதவி : ————.
(ஆ) நிரந்தரமா தற்காலிகமா ? : ————.
(இ) உபகாரச் சம்பள உரித்துடையதா அற்றதா ? : ————.
(ஈ) பதவியில் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறீரா : ————.
(உ) திணைக்களம் : ————.
(ஊ) நிலையம்/வேலை இடம் : ————.
(எ) திரட்டிய வருடாந்தச் சம்பள அளவுத்திட்டம் : ————.
(ஏ) திரட்டிய வருடாந்தச் சம்பள அளவுத்திட்டத்திலான தற்போதைய படி : ————.

9. கல்வித் தகைமைகள் பற்றிய விபரங்கள் :—

| பரீட்சை | வருடம் | பாடங்கள் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |

10. உயர்தொழில்/தொழில்நுட்பத் தகைமைகள் பற்றிய விபரங்கள் :—

| தராதரப் பத்திரம் | வழங்கியவர் | வருடம் | பாடங்கள் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5 | | | |

11. பொதுக் கல்வி கற்ற நிலையங்கள் :—

| நிலையம் | வகுப்பு | தொடக்கம் | வரை |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |
| 6. | | | |
| 7 | | | |

12. தொழில்நுட்ப/உயர்தொழில் கல்வி கற்ற நிலையங்கள் : —

| நிலையம் | பின்பற்றிய பயிற்சி நெறி | தொடக்கம் | வரை |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |

13. முன்னைய நியமனங்கள் (காலவரன் ஒழுங்கில் சுருக்கமாகக் கொடுபடவேண்டியது) : —

| திணைக்களம் | நிலையம்/வேலை இடம் | பதவி | நிரந்தரமா/ தற்காலிகமா | தொடக்கம் | வரை |
|---|---|---|---|---|---|
| 1. | | | | | |
| 2. | | | | | |
| 3. | | | | | |
| 4. | | | | | |
| 5. | | | | | |
| 6. | | | | | |

14. சட்டமுறை நீதிமன்றத்தில் யாதேனும் குற்றவியல் தவறுக்காக யாதேனும் குற்றத்தீர்ப்பு உம்மீது அளிக்கப்பட்டதா ? :————.
(அங்ஙனமாயின், விபரங்களைக் கொடுக்கவும்) :

15. விண்ணப்பதாரி அரசாங்க சேவையிலிருந்து விலக்கப்பட்டவரா ? : —
(அங்ஙனமாயின் விபரங்கள் கொடுக்கவும்)

16. விண்ணப்பதாரி பணமுட்டு அற்றவரா ? பணமுட்டு இருப்பின் எவ்வளவுக்கு : ————.

இவ்விண்ணப்பப் படிவத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதியளிக்கின்றேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் நியமனத்திற்குப் பின்னராயின் எவ்வித நஷ்டஈடின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் என அறிவேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : ————.

11–566—15.11.74 ந் திகதிய வர்த்தமானி இல. 138

---

## கல்வி அமைச்சு

### கண்ணாடி ஊதி பதவி

கல்வி அமைச்சின் கீழுள்ள சகல திணைக்களங்களிலும் கனிட்ட தொழில்நுட்ப நிலையங்களிலும் பல்தொழில்நுட்ப நிலையங்களிலும் உள்ள தகுதி பெற்ற அபேட்சகர்களிடமிருந்தும் வெளி அபேட்சகர்களிடமிருந்தும் கல்வி அமைச்சிலுள்ள கண்ணாடி ஊதி பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கீழ்க்காணும் மாதிரிப் படிவமுறையில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு "செயலாளர், கல்வி அமைச்சு (பொது நிர்வாகக் கிளை) மலாய் வீதி, கொழும்பு 2" என்ற முகவரிக்கு 1974.11.30 அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் விண்ணப்பம் அனுப்பப்படும் காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தெளிவாக அடையாளமிடப்பட வேண்டும்.

2. சம்பள விகிதம் :—இப்பதவிக்குரிய திரட்டிய வருடாந்தச் சம்பள அளவுத் திட்டம் பின்வருமாறு :—

ரூபா 3,144—15×144—ரூபா 5,304.

3. நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.—இப்பதவி நிரந்தரமானதும் உபகாரச் சம்பள உரித்தற்றதுமாகும். தெரிவு செய்யப்படுபவர்கள் அரசாங்க சேவை சேமலாப நிதிக்குக் கட்டணம் செலுத்த வேண்டும். 31.12.71 க்குமுன் நிரந்தர உபகாரச் சம்பள உரித்துடைய பதவிகளை வகிப்போர் தொடர்ந்து உபகாரச் சம்பள உரித்துக்களை அனுபவிப்பார்கள்.

4. தகவுத்திறன்.—ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்பவராகத் திருப்தியான சான்று காட்ட வேண்டும் :—

(i) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராயும் 24 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். (ஏற்கெனவே அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது).

(ii) சிறந்த ஒழுக்கமும் உடல் நலமும் உடையவராய் இருக்க வேண்டும்.

(iii) (அ) கல்வித் தகைமைகள்
பௌதிகவியல், பிரயோக கணிதம் ஆகியவை உட்பட நாலு விஞ்ஞான பாடங்களில் திறமைச் சித்திகளுடன் இரு தடவைகளுக்கு மேற்படாது தோற்றி க. பொ. த. (சா. தா.) பத்திரப் பரீட்சையில் 6 பாடங்களில் சித்தி பெற்றிருப்பதுடன் க. பொ. த. (உயர்தர) பத்திரப் பரீட்சையில் குறைந்த பட்சம் ஒரு விஞ்ஞான பாடத்திலேனும் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

(ஆ) உயர்தொழில் தகைமைகள்

(i) விஞ்ஞான கண்ணாடி உபகரணங்களின் உற்பத்தியில் பயிற்சி பெற்றிருக்க வேண்டும்.

(ii) விஞ்ஞான கண்ணாடி உபகரணங்களின் உற்பத்தியிலும் கண்ணாடி ஊதுதலிலும் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

குறிப்பு.—ஐக்கிய இராச்சிய யுத்த களங்களில் யாதேனும் தொழிலில் புரிந்துள்ள சேவை அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிலையத்திலான சேவையாகக் கணிக்கப்படும்.

5. தகுதி பெற்ற அபேட்சகர்கள் தமது விண்ணப்பங்களைத் தத்தம் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்ப வேண்டும். விதிக்கப்பட்டுள்ள திகதிக்குப் பின் பெற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பங்கள், விதிக்கப்பட்டுள்ள திகதிக்கு முன் உரிய திணைக்களத் தலைவரால் பெறப்பட்டு அவற்றை ஏற்றுக்கொள்ளுமாறு போதிய காரணங்கள் காட்டி அவர் சிபார்சு செய்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

6. அபேட்சகர்களைத் தெரிவு செய்யும் விடயத்தில், பின்வரும் முன்னுரிமைக் கிரமம் பின்பற்றப்படும் :—

(1) கல்வி அமைச்சின் கீழுள்ள சகல திணைக்களங்களிலும் தாபனங்களிலுமுள்ள வேலையாளர்கள்.

(2) வெளி அபேட்சகர்கள்.

7. அபேட்சகர்கள், வேண்டப்படும் நேரத்தில், பின்வரும் சாதனங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

(அ) பிறப்புப் பதிவுச் சாட்சிப்பத்திரம் (ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளில்

ஒழுங்குச் சட்ட நோக்கத்தின் பொருட்டு வழங்கப்படும் பிறப்புச் சாட்சிப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது).

(ஆ) அதியுயர்ந்த கல்விச் சான்றிதழ்களும் உயர்தொழில் தகைமைச் சான்றிதழ்களும்.

(இ) செயல்முறை அனுபவத்தை அத்தாட்சிப்படுத்தும் சான்றிதழ்.

8. இவ்வர்த்தமானியின் I ஆம் பகுதியின் (II அ) ஆம் பிரிவின் ஆரம்பத்தில் வெளியிடப்பட்டுள்ளவையும் அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்கு அமைபவையுமான பொது நிபந்தனைகளுக்குக் கவனம் கோரப்படுகிறது.

பதிற் செயலாளர்,
கல்வி அமைச்சு.

தொடரெண் : பொ. நி. 5/427,
பொது நிர்வாகக் கிளை,
கல்வி அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு 2.
1974 நொவெம்பர் 5.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

(விண்ணப்பம் 8" × 13½" அளவுத் தாளில் தயாரிக்கப்பட வேண்டும்)

விண்ணப்பிக்கும் பதவி :.................. ......

1. முழுப் பெயர் :————.
2. நிரந்தர விலாசம் :————.
3. சொந்த இடம் :————.
4. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியின்றுள்ளபடி சரியான வயது :—
வருடம் :————. மாதம் :————. நாள் :————.
பிறந்த திகதி:————.
5. பின்வருவோர் பிறந்த இடம் :—
(அ) விண்ணப்பதாரி :————.
(ஆ) விண்ணப்பதாரியின் தகப்பன் :————.
(இ) விண்ணப்பதாரியின் தகப்பன்வழிப் பாட்டன் :————.
(ஈ) விண்ணப்பதாரியின் தகப்பன்வழிப் பூட்டன் :————.
6. வம்சாவழி காரணமாகவா பதிவு காரணமாகவா இலங்கையர் :————.
7. கல்வித் தகைமைகள் :————.
(i) பொது :————.
(ii) உயர்தொழில்/தொழில்நுட்பக் கல்வித் தகைமைகள் அல்லது இவ்விருவகைத் தகைமைகள் பற்றிய விபரங்கள் :————.
(iii) சிங்களத்தில்/தமிழில் சித்தியடைந்த அதியுயர்ந்த பரீட்சை பற்றிய விபரங்கள் :————.
8. அறிவித்தலின் 4 (iii) (ஆ) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அனுபவம் பற்றிய விபரங்கள் :————.
(சேவை புரிந்த நிலையங்கள், சேவைக்காலம், வகித்த பதவிகள் ஆகியவை குறிப்பிடப்பட வேண்டும்).
9. விவாகம் செய்தவரா? விவாகம் செய்யாதவரா? தாரமிழந்தவரா? :————.
10. குற்றவியல் தவறு யாதேனும் தொடர்பில் சட்டமுறை நீதிமன்றத்தில் உம்மீது குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டதா? அங்ஙனமாயின்—
(அ) வழக்கின் திகதி :————.
(ஆ) இலக்கம் :————.
(இ) குற்றத் தீர்ப்பின் தன்மை ஆகிய விவரங்களைக் கொடுக்கவும் :————.
11. பணமுட்டு அற்றவரா, பணமுட்டு இருப்பின் எவ்வளவுக்கு? :————.
12. உம்மீது யாதேனும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதா? எடுக்கப்பட்டதாயின், விபரங்களைக் கொடுக்கவும் :————.
13. இராணுவ சேவையிலிருந்து விலகியவராயின் (அ) படைக் கூறு, (ஆ) பதவி (இ) சேர்ந்த, விலகிய திகதிகள் ஆகியவற்றைக் கொடுக்கவும் :————.
14. பாடசாலையிலிருந்து விலகியபின் புரிந்த உத்தியோகம் :————.
(i) வகித்த பதவி :————.
(ii) சேவை புரிந்த காலம் :————.
(iii) விலகியதற்கான காரணம் :————.
(இ) அண்மையில் பெற்றுக் கொள்ளப்பட்ட நற்சாட்சிப்பத்திரங்கள் இரண்டு. இவற்றுள் ஒன்று பகுதி கிராமச் சேவகருடையதாக இருத்தல் வேண்டும்.

5. அரசாங்க, கூட்டுத்தாபன, உள்ளூராட்சி மன்ற உத்தியோகத்தர்களினதும் உள்ளூராட்சிச் சபைப் பிரதிநிதிகளினதும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

6. விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி விண்ணப்பதாரிகளுக்கு அறிவித்தல் கொடுக்கப்படமாட்டாது.

7. ஹத்பொக்குண பகுதி : கல்டன்வவ, ஹத்பொக்குண, கும்புகுளாவ, ஹாதிகமுவ எனும் கிராமச் சேவகர் பகுதிகளை அடக்கியதாகும்.

சந்திரானந்த த சில்வா,
குருநாகல் அரசாங்க அதிபர்.

குருநாகல் கச்சேரி,
1974.11.01 ந் திகதி.

குருநாகல் மாவட்ட பொல்பித்திகம காரியாதிகாரி பிரிவில் ஹத்பொக்குண பகுதி திடீர்மரண பரிசோதகர் பதவி

1. (அ) விண்ணப்பதாரியின் பெயர் (இறுதியில் வரும் பெயர்) : ———.

(ஆ) விண்ணப்பதாரியின் வேறு பெயர்கள் (வம்சாவழிப் பெயர்) :———.

2. விலாசம் :———.

3. (அ) நிரந்தர வசிப்பிடமும் அங்கு வசிக்கும் காலமும் :———.

(ஆ) வசிக்கும் கிராமசேவகர் பிரிவு :———.

4. (அ) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு வயது :———.

(ஆ) பிறந்த திகதியும், இடமும் :———.

5. விவாகமானவரா/விவாகமாகாதவரா ? :———.

6. கல்வித்தகைமை :———.

7. தற்போது புரியும் தொழில் :———.

8. முன்னர் ஏதாவது தொழில் புரிந்தவரா ? அப்படியாயின் அதுபற்றிய விபரம் :———.

9. தம்வசமுள்ள சொத்துக்களின் பெறுமதியும், அளவும், விபரமாக :———.

10. (அ) மாதாந்த வருமானம் :———.

(ஆ) மாதாந்த வருமானம் பெறும் வழி :———.

11. விண்ணப்பதாரி கடன்பட்டவரா ? அப்படியாயின் அதுபற்றிய விபரம் :———.

12. விண்ணப்பதாரி ஏதாவது குற்றங்களுக்கு குற்றவாளியாக்கப்பட்டு நீதிமன்றத்தால் தண்டனை பெற்றுள்ளவரா : ———.

13. இந்தப் பதவிக்கான வேறும் தகைமைகள் இருப்பின் அதுபற்றிய விபரம் :———.

———,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :———.

11-490—15.11.74 ந் திகதிய வர்த்தமானி இல. 138

---

குருநாகல் மாவட்ட இப்பாகமுவ உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இஹலவிஸிதெகே கோறளை திடீர் மரண பரிசோதகர் பதவி

குருநாகல் மாவட்ட இப்பாகமுவ உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இஹலவிஸிதெகே கோறளை திடீர் மரண பரிசோதகர் பதவிக்கு கீழ்வரும் தகைமை உடையோர் விண்ணப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

கீழே தரப்பட்டுள்ள படிவத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் பத்திரங்கள் 1974.12.06 ந் திகதிக்கு முன்னர் பின்வரும் விலாசத்துக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

"அரசாங்க அதிபர், கச்சேரி, குருநாகல்".

2. இந்தப் பதவிக்கு சம்பளம் வழங்கப்படமாட்டாது. ஒவ்வொரு திடீர் மரணவிசாரணைக்கும் 7 ரூபா 50 சதம் வீதமான ஒரு படி வழங்கப்படும்.

3. பின்வரும் தகைமைகள் உள்ளமைக்கு போதிய அத்தாட்சி சமர்ப்பிக்கப்படவேண்டும் :—

(அ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதிக்கு வயது 30 வருடங்களுக்கு குறையாமலும் 55 வருடங்களுக்கு கூடாமலும் இருத்தல்,

(ஆ) சிறந்த சரிதையும் நல்ல தேகாரோக்கியமும் உடையவராயிருத்தல்,

(இ) மேற்கூறிய கோறளையில்/பகுதியில் நிரந்தர பதிவாளராய் இருத்தல்,

(ஈ) சிங்களப் பாஷையுடன் சிரேஷ்டபாடசாலைத் தராதரப்பத்திரப் பரீட்சையில் அல்லது க.பொ.த. (சாதாரண) தராதரப் பத்திரப் பரீட்சையில் இரு தடவைக்கு கூடாத தடவைகளில் சிங்களம்/தமிழ் உடன் எண்கணிதம்/ஆரம்பகணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தியெய்தி இருத்தல்,

(உ) மாதாந்த வருமானம் ரூபா 200 அல்லது அதற்கு மேலதிகமாக இருத்தல்.

4. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களுடன் பின்வரும் அத்தாட்சிப பத்திரங்களின் பிரதிகளை அனுப்புதல் வேண்டும.

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம்,

(ஆ) கல்வித் தகைமைக்கான அத்தாட்சிப்பத்திரங்கள்,

(இ) அண்மையில் பெற்றுக் கொள்ளப்பட்ட நற்சாட்சிப்பத்திரங்கள் இரண்டு. இவற்றுள் ஒன்று பகுதி கிராமச் சேவகருடையதாக இருத்தல் வேண்டும்.

5. அரசாங்க, கூட்டுத்தாபன, உள்ளூராட்சி மன்ற உத்தியோகத்தர்களினதும் உள்ளூராட்சிச் சபைப் பிரதிநிதிகளினதும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

6. விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி விண்ணப்பதாரிகளுக்கு அறிவித்தல் கொடுக்கப்படமாட்டாது.

சந்திரானந்த த சில்வா,
குருநாகல் அரசாங்க அதிபர்.

குருநாகல் கச்சேரி,
1974.11.01 ந் திகதி.

குருநாகல் மாவட்ட இப்பாகமுவ உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இஹலவிஸிதெகே கோறளை திடீர்மரண பரிசோதகர் பதவி

1. (அ) விண்ணப்பதாரியின் பெயர் (இறுதியில் வரும் பெயர்) :———.

(ஆ) விண்ணப்பதாரியின் வேறு பெயர்கள் (வம்சாவழிப் பெயர்) :———.

2. விலாசம் :———.

3. (அ) நிரந்தர வசிப்பிடமும் அங்கு வசிக்கும் காலமும் :———.

(ஆ) வசிக்கும் கிராமசேவகர் பிரிவு :———.

4. (அ) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு வயது :———.

(ஆ) பிறந்த திகதியும், இடமும் :———.

5. விவாகமானவரா/விவாகமாகாதவரா ? :———.

6. கல்வித்தகைமை :———.

7. தற்போது புரியும் தொழில் :———.

8. முன்னர் ஏதாவது தொழில் புரிந்தவரா ? அப்படியாயின் அதுபற்றிய விபரம் :———.

9. தம்வசமுள்ள சொத்துக்களின் பெறுமதியும், அளவும், விபரமாக :———.

10. (அ) மாதாந்த வருமானம் :———.

(ஆ) மாதாந்த வருமானம் பெறும் வழி :———.

11. விண்ணப்பதாரி கடன்பட்டவரா : அப்படியாயின் அதுபற்றிய விபரம் :———.

12. விண்ணப்பதாரி ஏதாவது குற்றங்களுக்கு குற்றவாளியாக்கப்பட்டு நீதிமன்றத்தால் தண்டனை பெற்றுள்ளவரா : ———.

13. இந்தப் பதவிக்கான வேறும் தகைமைகள் இருப்பின் அது பற்றிய விபரம் :———.

———,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :———.

11-491—15.11.74 ந் திகதிய வர்த்தமானி இல. 138

---

குருநாகல் மாவட்ட கல்கமுவ உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மஹாநான்னேரிய கிராமசபை பகுதி திடீர் மரண பரிசோதகர் பதவி

கீழே தரப்பட்டுள்ள படிவத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் பத்திரங்கள் 1974.12.06 ந் திகதிக்கு முன்னர் பின்வரும் விலாசத்துக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

" அரசாங்க அதிபர், கச்சேரி, குருநாகல் ".

2. இந்தப் பதவிக்கு சம்பளம் வழங்கப்படமாட்டாது. ஒவ்வொரு திடீர் மரணவிசாரணைக்கும் 7 ரூபா 50 சதம் விதமான ஒரு படி வழங்கப்படும்.

3. பின்வரும் தகைமைகள் உள்ளமைக்கு போதிய அத்தாட்சி சமர்ப்பிக்கப்படவேண்டும்.

(அ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதிக்கு வயது 30 வருடங்களுக்கு குறையாமலும் 55 வருடங்களுக்கு கூடாமலும் இருத்தல்,

(ஆ) சிறந்த சரிதையும் நல்ல தேகாரோக்கியமும் உடையவராயிருத்தல்,

(இ) மேற்கூறிய கோறளையில்/பகுதியில் நிரந்தரபதிவாளராய் இருத்தல்,

(ஈ) சிங்களப் பாஷையுடன் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது க.பொ.த. (சாதாரண) தரப் பத்திரப் பரீட்சையில் இரு தடவைக்கு கூடாத தடவைகளில் சிங்களம்/தமிழ் உடன் எண்கணிதம்/ஆரம்பகணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தியெய்தி இருத்தல்,

(உ) மாதாந்த வருமானம் ரூபா 200/- அல்லது அதற்கு மேலதிகமாக இருத்தல்,

4. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களுடன் பின்வரும் அத்தாட்சிப் பத்திரங்களின் பிரதிகளை அனுப்புதல் வேண்டும் :—

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம்,

(ஆ) கல்வித் தகைமைக்கான அத்தாட்சிப்பத்திரங்கள்,

(இ) அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட நற்சாட்சிப்பத்திரங்கள் இரண்டு. இவற்றுள் ஒன்று பகுதி கிராமச் சேவகருடையதாக இருத்தல் வேண்டும்.

5 அரசாங்க, கூட்டுத்தாபன, உள்ளூராட்சி மன்ற உத்தியோகத்தர்களினதும் உள்ளூராட்சிச் சபைப் பிரதிநிதிகளினதும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

6. விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி விண்ணப்பதாரிகளுக்கு அறிவித்தல் கொடுக்கப்படமாட்டாது.

சந்திரானந்த த சில்வா,
குருநாகல் அரசாங்க அதிபர்.

குருநாகல் கச்சேரி,
1974.11.01 ந் திகதி.

குருநாகல் மாவட்ட கல்கமுவ உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மஹாநான்னேரிய கிராமசபை பகுதி திடீர் மரண பரிசோதகர் பதவி

1. (அ) விண்ணப்பதாரியின் பெயர் (இறுதியில் வரும் பெயர்) : ———.

(ஆ) விண்ணப்பதாரியின் வேறு பெயர்கள் (வம்சாவழிப் பெயர்) :———.

2. விலாசம் :———.

3. (அ) நிரந்தர வசிப்பிடமும் அங்கு வசிக்கும் காலமும் :———

(ஆ) வசிக்கும் கிராமசேவகர் பிரிவு :———.

4. (அ) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு வயது :———.

(ஆ) பிறந்த திகதியும், இடமும் :———.

5. விவாகமானவரா/விவாகமாகாதவரா :———.

6. கல்வித் தகைமை :———.

7. தற்போது புரியும் தொழில் :———.

8. முன்னர் ஏதாவது தொழில் புரிந்தவரா ? அப்படியாயின் அதுபற்றிய விபரம் :———.

9. தம் வசமுள்ள சொத்துக்களின் பெறுமதியும், அளவும், விபரமாக :———.

10. (அ) மாதாந்த வருமானம் :———.

(ஆ) மாதாந்த வருமானம் பெறும் வழி :———.

11. விண்ணப்பதாரி கடன்பட்டவரா ?, அப்படியாயின் அதுபற்றிய விபரம் :———.

12. விண்ணப்பதாரி ஏதாவது குற்றங்களுக்கு குற்றவாளியாக்கப்பட்ட நீதிமன்றத்தால் தண்டனை பெற்றுள்ளவரா : ———.

13. இந்தப் பதவிக்கான வேறும் தகைமைகள் இருப்பின் அது பற்றிய விபரம் :———.

———,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :———.

11-492—15.11.74 ந் திகதிய வர்த்தமானி இல. 138

**குருநாகல் மாவட்ட இப்பாகமுவ உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நிக்கவெஹர பகுதி திடீர் மரண பரிசோதகர் பதவி**

குருநாகல் மாவட்ட இப்பாகமுவ உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நிக்கவெஹர பகுதி திடீர் மரண பரிசோதகர் பதவிக்கு கீழ் வரும் தகைமை உடையோர் விண்ணப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

கீழே தரப்பட்டுள்ள படிவத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் பத்திரங்கள் 1974.12.06 ந் திகதிக்கு முன்னர் பின் வரும் விலாசத்துக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

"அரசாங்க அதிபர், கச்சேரி, குருநாகல்".

2. இந்தப் பதவிக்கு சம்பளம் வழங்கப்படமாட்டாது. ஒவ்வொரு திடீர் மரணவிசாரணைக்கும் 7 ரூபா 50 சதம் வீதமான ஒரு படி வழங்கப்படும்.

3. பின்வரும் தகைமைகள் உள்ளமைக்கு போதிய அத்தாட்சி சமர்ப்பிக்கப்படவேண்டும்.

(அ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதிக்கு வயது 30 வருடங்களுக்கு குறையாமலும் 55 வருடங்களுக்கு கூடாமலும் இருத்தல்,

(ஆ) சிறந்த சரிதையும் நல்ல தேகாரோக்கியமும் உடையவராயிருத்தல்,

(இ) மேற்கூறிய கோறளையில்/பகுதியில் நிரந்தரபதிவாளராய் இருத்தல்,

(ஈ) சிங்களப் பாஷையுடன் சிரேஷ்டபாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது க.பொ. (சாதாரண) தரப்பத்திரப் பரீட்சையில் இரு தடவைக்கு கூடாத தடவைகளில் சிங்களம்/தமிழ் உடன் எண்கணிதம்/ஆரம்பகணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தியெதி இருத்தல்,

(உ) மாதாந்த வருமானம் ரூபா 200/- அல்லது அதற்கு மேலதிகமாக இருத்தல்,

4. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களுடன் பின்வரும் அத்தாட்சிப் பத்திரங்களின் பிரதிகளை அனுப்புதல் வேண்டும்.

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம்,

(ஆ) கல்வித் தகைமைக்கான அத்தாட்சிப்பத்திரங்கள்,

(இ) அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட நற்சாட்சிப்பத்திரங்கள் இரண்டு. இவற்றுள் ஒன்று பகுதி கிராமச் சேவகருடையதாக இருத்தல் வேண்டும்.

5 அரசாங்க, கூட்டுத்தாபன, உள்ளூராட்சி மன்ற உத்தியோகத்தர்களினதும் உள்ளூராட்சிச் சபைப் பிரதிநிதிகளினதும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

6. விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி விண்ணப்பதாரிகளுக்கு அறிவித்தல் கொடுக்கப்படமாட்டாது.

7. நிக்கவெஹர பகுதி, மக்குல்பொத்த, நிக்கவெஹர, ஹெனவ கிம்புல்வானு ஓய, எனும் கிராமசேவகர் பிரிவுகளை அடங்கியதாகும்.

சந்திரானந்த த சில்வா.
குருநாகல் அரசாங்க அதிபர்.

குருநாகல் கச்சேரி,
1974.11.01 ந் திகதி.

**குருநாகல் மாவட்ட இப்பாகமுவ உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நிக்கவெஹர பகுதி திடீர் மரண பரிசோதகர் பதவி**

1. (அ) விண்ணப்பதாரியின் பெயர் (இறுதியில் வரும் பெயர்) : ————.

(ஆ) விண்ணப்பதாரியின் வேறு பெயர்கள் (வம்சாவழிப் பெயர்) :————.

2. விலாசம் :————.

3. (அ) நிரந்தர வசிப்பிடமும் அங்கு வசிக்கும் காலமும் :——
(ஆ) வசிக்கும் கிராமசேவகர் பிரிவு :————.

4. (அ) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு வயது :————.
(ஆ) பிறந்த திகதியும், இடமும் :————.

5. விவாகமானவரா/விவாகமாகாதவரா ? :————.

6. கல்வித் தகைமை :————.

7. தற்போது புரியும் தொழில் :————.

8. முன்னர் ஏதாவது தொழில் புரிந்தவரா? அப்படியாயின் அதுபற்றிய விபரம் :————.

9. தம் வசமுள்ள சொத்துக்களின் பெறுமதியும், அளவும், விபரமாக :————.

10. (அ) மாதாந்த வருமானம் :————.
(ஆ) மாதாந்த வருமானம் பெறும் வழி :————.

11. விண்ணப்பதாரி கடன்பட்டவரா?, அப்படியாயின் அதுபற்றிய விபரம் :————.

12. விண்ணப்பதாரி ஏதாவது குற்றங்களுக்கு குற்வாளியாக்கப்பட்டு நீதிமன்றத்தால் தண்டனை பெற்றுள்ளவரா? :————.

13. இந்தப் பதவிக்கான வேறும் தகைமைகள் இருப்பின் அது பற்றிய விபரம் :————.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :————.

11-493—15.11.74 ந் திகதிய வர்த்தமானி இல. 138

## பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்**

ஆசிரியர்—ஆலோசகர் தராதரப் பரீட்சை, 1974

1975 ஜனவரி மாதம் 18 ஆம், 19 ஆம் திகதிகளில் நடைபெற இருக்கும் இப்பரீட்சையின் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 1974 டிசெம்பர் 15 ஆந் திகதியாகும்.

**பிரமாணங்கள்**

1. **முகவுரை.**—இப்பரீட்சைப் பிரமாணங்கள் கல்வியமைச்சுடன் கலந்து வகுக்கப்பட்டதாகும். இப்பரீட்சை மகா கல்வியதிபதிக்காகப் பரீட்சா. காரியினால் நடாத்தப்படும்.

2. **பரீட்சை நடத்தப்படும் இடங்கள்.**—(i) பின்வரும் இடங்களில் பரீட்சை நடைபெறும் :—அனுராதபுரம், பண்டாரவளை, மட்டக்களப்பு, கொழும்பு, காலி, களுத்துறை, யாழ்ப்பாணம், கண்டி, குருநாகலை, மாத்தறை, இரத்தினபுரி.

(ii) பரீட்சார்த்திகள் தாங்கள் விரும்பிய மூன்று இடங்களைத் தெரிவுசெய்தல் வேண்டும். போதிய அளவு பரீட்சார்த்திகள் இல்லாத இடங்கள் நீக்கப்படும்.

(iii) சாதாரணமாகப் பரீட்சார்த்தியால் முதன்முதல் தெரிவுசெய்யப்பட்ட இடத்தை மாற்ற அனுமதிக்கப்படமாட்டாது. போதியளவு அறிவித்தல் கொடுக்கப்பட்டதும் மிகவும் கஷ்டங்களையுடையதுமெனக் கருதப்படும் ஒரு விண்ணப்பம் மாத்திரம் அதன் தன்மைக்கேற்பக் கவனிக்கப்படும்.

3. **பரீட்சை மொழி.**—இப்பரீட்சை தமிழ், சிங்களம் என்னும் இரு மொழிகளிலும் நடைபெறும்.

4. **பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமை.**—அங்கீகரிக்கப்பட்ட பாடசாலையில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பயிற்சிக் கலாசாலையிற் கற்பித்துக் கொண்டிருக்கும் பயிற்றப்பட்ட பட்டதாரி ஆசிரியர், பட்டதாரி ஆசிரியர், பயிற்றப்பட்ட முதலாம் வகுப்பு ஆசிரியர் மாத்திரம் இப்பரீட்சைக்கு விண்ணப்பஞ் செய்யலாம். இத்துடன், கல்வியமைச்சினால் அல்லது கல்வி அமைச்சினால் ஒழுங்குசெய்யப்பட்ட வழிகாட்டற் பயிற்சி வகுப்புகளில் திருப்திகரமாகப் பூரண பயிற்சி பெற்றவராகவும் இருத்தல் வேண்டும்.

5. **பரீட்சைக்கு அனுமதித்தல்.**—(i) இப்பிரமாணங்களின் பிரகாரம், தேவையான கட்டணத்துடன் விண்ணப்பித்துள்ள பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு அனுமதிக்கப்படுவர்.

(ii) இப்பிரமாணங்களின்படி தகுதி உடையவர்களென விண்ணப்பம் அனுப்பும் பரீட்சார்த்திகளெல்லோரும் எழுத்துப் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படுவர். ஆனால் அவ்வாறு அனுமதிக்கப்பட்டமை அவர் அப்பரீட்சைக்குத் தகுதியுடையவரென்பதைக் குறிக்காது. ஒரு பரீட்சார்த்தி

இப்பிரமாணங்களின்படி தகுதியற்றவரெனக் காணப்பட்டால் அல்லது தேவையான விபரங்களை மறைத்து வைத்தவராகக் காணப்பட்டால் அல்லது பொய்யான விபரங்களைக் கொடுத்திருந்தால், பரீட்சார்த்தியாந்தன்மை அவரது பரீட்சையின்போதோ அல்லது அதன் பின்னரோ நீக்கப்படலாம். தராதரப் பத்திரம் வழங்கப்பட்டிருப்பின் அது திரும்பப் பெற்றுப் பயனற்றதாக்கப்படும்.

6. **விண்ணப்பங்கள்.**—(i) இப்பரீட்சைக்கான விண்ணப்பப் பத்திரங்கள் பரீட்சைப் பகுதியினால் வழங்கப்பட மாட்டாது. இவ்வறிவித்தலின் கடைசியில் வெளியிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் பத்திரத்தை 8″ × 13″ அளவினுலான தாளில் இரு பக்கங்களிலும் முறைப்படி தயாரித்த (தட்டச்சில் பொறித்தல் நன்று) பாவித்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பப் பத்திரங்களைப் பரீட்சார்த்தி தனது சொந்தக் கையெழுத்திலுற் தெளிவாகவும் திருத்தமாகவும் நிரப்புதல் வேண்டும். பூரணப்படுத்தப்படாத அரைகுறையான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன், பரீட்சையின் பின்வரும் குறிப்பிட்ட பரீட்சார்த்தியினது பரீட்சார்த்தியாந்தன்மை நிராகரிக்கப்படும்.

(iii) பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் பதிவு செய்யப்பட்ட கடித மூலம் விண்ணப்ப முடிவு திகதியிலன்றோ அல்லது அதற்கு முன்பதாகவோ கிடைக்கும்படி பரீட்சாதிகாரி, பரீட்சைப் பகுதி, கொழும்பு 2 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பத்தை உள்ளடக்கியுள்ள தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

(iv) விண்ணப்பங்கள் கிடைத்தமைபற்றி அறிவிக்கப்படமாட்டாது.

(v) விண்ணப்பங்களுடன் வேறு எவ்வித உறுதிப்பத்திரங்கள் அனுப்புதல் கூடாது.

7. **பிரவேசக் கட்டணம்.**—பிரவேசக் கட்டணம் ரூபா 25.00. இக்கட்டணம் இறைவரி முத்திரைகள் மூலம் செலுத்தப்படல் வேண்டும். பரீட்சார்த்தி பிரவேசப் பத்திரத்தில் இவற்றை ஒட்டி இவற்றின் மேல் கையொப்பத்தை இட்டு பயனற்றதாக்க வேண்டும். பயனற்றதாக்காமல் அனுப்பப்படும் முத்திரைகளுக்கு இக்கந்தோர் பொறுப்பேற்காது.

8. **பிரவேச விண்ணப்பங்களை நிராகரித்தல்.**—(i) பின்வரும் பிரவேசப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும். பரீட்சார்த்திகளுக்கும் அறிவிக்கப்படும் :—

(அ) பூர்த்தியற்றதாகவோ, குறைபாடாகவோ, இப்பிரமாணங்களுக்கு அமையாததாகவோ உள்ளவை.

(ஆ) உரிய பிரவேசக் கட்டணப்பணம் இல்லாதிருப்பவை.

(இ) முடிவு தேதிக்குப் பின்னர் இக்கந்தோரில் கிடைப்பவை.

(ii) மேலே (i) இல் (அ) அல்லது (ஆ) அல்லது (இ) இல் கூறிய குறைபாடுகளுடன் விண்ணப்பம் அனுப்பிய பரீட்சைக்குத் தோற்றிய பரீட்சார்த்தியின் பரீட்சார்த்தியாந்தன்மை நிராகரிக்கப்படும்.

(iii) விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டால் அல்லது பரீட்சார்த்தியாந்தன்மை நீக்கப்பட்டால் பிரவேசக் கட்டணம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

9. **கட்டணப் பணத்தைத் திருப்பிக் கொடுத்தல்.**—ஒரு முறை செலுத்தப்பட்ட கட்டணப் பணம் முழுவதுமோ அல்லது அதன் ஒரு பகுதியோ திருப்பிக் கொடுபடமாட்டாது. எனினும், பரீட்சார்த்தியினுடைய மரணத்தின் அல்லது மிகவும கடுமையான நீண்ட காலச் சுகவீனத்தின் (உதாரணமாக : க்ஷயரோகம், பாரிசவாதம், மூளை அல்லது நரம்புக் கோளாறு முதலியன) விஷயத்தில், பரீட்சார்த்தி ஒரு பாடத்திற்கும் தோற்றுமலும், பரீட்சாதிகாரி திருப்தியடையக்கூடிய முறையில் ஒரு வைத்திய அத்தாட்சிப் பத்திரம் அல்லது மரண அத்தாட்சிப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டும் இருப்பின் முழுக் கட்டணமும் திருப்பிக் கொடுக்கப்படலாம், கட்டணப் பணத்தைத் திருப்பிக்கோரும் விண்ணப்பம் பரீட்சைக் கடைசித் தினத்திலிருந்து 14 நாட்களுக்குள் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அவ்விண்ணப்பத்தில் பெயர், முகவரி, சுட்டிலக்கம், பரீட்சை இடம் என்பவற்றைக் குறிப்பிடுதல் வேண்டும். உரிய திகதிக்குப் பின்னர் அனுப்பப்படுகின்ற கட்டணப்பணத்தைத் திருப்பிக்கோரும் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

10. **பிரவேசப் பத்திரங்கள்.**—பிரசுரத்தைப் பார்த்துத் தம் பிரவேசச் சீட்டைப் பெறாத பரீட்சார்த்திகள் உடனே பரீட்சாதிகாரி, மலே வீதி, கொழும்பு 2 ("Exams", Colombo) என்ற முகவரிக்குத் தந்தி மூலம் அறிவிக்க வேண்டும். அவ்வாறு அறிவிக்கும்பொழுது கீழ்வரும் விபரங்களைக் குறிப்பிடல் வேண்டும் :—

(1) பரீட்சையின் பெயர் ;
(2) பரீட்சார்த்தியின் முழுப்பெயர் ;
(3) பரீட்சார்த்தியினது முகவரி ;
(4) பரீட்சைக்குத் தோற்றக் கோரிய பரீட்சை இடங்கள் ;
(5) விண்ணப்பப்பத்திரம் அனுப்பிய தேதி, அதனைப் பதிவு செய்தனுப்பிய தபாற்கந்தோர், பதிவிலக்கம் என்பன.

11. **அடையாளப் பத்திரங்கள்.**—(i) சகல பரீட்சார்த்திகளும் தாம் எடுக்கும் ஒவ்வொரு பாடத்துக்கும் தோற்றும்போது பரீட்சை மண்டபத்தில் உள்ள அதிகாரியைத் திருப்திப்படுத்தத்தக்கதாகத் தாம் இன்னாரென்பதை நிரூபிக்க வேண்டும். இதன் பொருட்டுப் பின்வரும் பத்திரங்களுள் ஒன்று அங்கீகரிக்கப்படும் :—

(அ) தடாற் பகுதித் தலைவர் அளிக்கும் அடையாளச் சீட்டு ;

(ஆ) பரீட்சை நிகழும் தேதிக்கு முன் மூன்று வருடங்களுக்குள் அளிக்கப்பட்டதும் உறுதியுள்ளதுமான வெளிநாட்டுப் பிரயாண அனுமதிச் சீட்டு ;

(இ) பரீட்சை நிகழும் தேதிக்கு மூன்று வருடங்களுக்குள் அரசாங்கப் பகுதியொன்றின் அதிகாரத்தால் அல்லது சட்டப்படியுள்ள ஸ்தாபனத்தால் அளிக்கப்பட்டதும் பரீட்சார்த்தியின் புகைப்படத்தைக் கொண்டுள்ளதுமான பத்திரம்/உத்தரவுப் பத்திரம் அல்லது வேறு பத்திரம்.

(ஈ) ஆட்கள் பதிவு ஆணையாளரினால் வழங்கப்பட்ட அடையாள அட்டை.

(ii) ஆசிரியரான ஒரு பரீட்சார்த்தியிடமிருந்து மேலே கூறியவற்றில் குறிப்பிட்ட பத்திரங்களில் ஒன்று அல்லது அதற்குப் பதிலாகப் பரீட்சார்த்தியின் புகைப்படத்தின் ஒரு பிரதி ஏற்றுக்கொள்ளப்படும். புகைப்படப் பிரதி அவ்வாறு ஏற்றுக்கொள்வதற்கு அப்புகைப்படத்தின் மறுபக்கத்தில் அப்பரீட்சார்த்தியின் முழுப்பெயரும், முகவரியும், வழக்கமான கையொப்பமும் அதில் கையொப்பமிட்டவரின் புகைப்படமென்று அப்பரீட்சார்த்தியின் தலைமையாசிரியரின் உறுதிக்கூற்றும் இருத்தல்வேண்டும். பரீட்சார்த்தி தலைமையாசிரியராயிருந்தால் வேறொரு தலைமையாசிரியரின் உறுதிக்கூற்று ஏற்றுக்கொள்ளப்படும்.

12. **பரீட்சைத் திட்டம்.**—(i) 1972 ம் ஆண்டிலும் அதன் பின்னர் நடைபெறும் ஆசிரிய ஆலோசகர் தராதரப் பத்திரப் பரீட்சைகளில் கீழ்க் குறிக்கப்பட்டவாறு பாடங்கள் ஐந்தாக இருக்கும் :—

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | கல்வி உளநூல் | 3 மணித்தியாலம் | | 100 புள்ளி |
| 2. | மதிப்பீடும் புள்ளி விபரவியலும் | 3 மணித்தியாலம் | | 100 புள்ளி |
| 3. | மாணவர்களையும் தொழில்களையும்பற்றிய கற்கை | 3 மணித்தியாலம் | | 100 புள்ளி |
| 4. | வழிகாட்டுதலின் தத்துவங்களும் தொழில்நுட்பங்களும் | 3 மணித்தியாலம் | | 100 புள்ளி |
| 5. | பகுதி I—வழிகாட்டுதல் தத்துவம் (வழிகாட்டுதல் தத்துவத்தைச் செயல்முறை நிலைமைகளில் பிரயோகித்தலில் ஒரு பொது வினாப்பத்திரம்) | $1\frac{1}{2}$ மணித்தியாலம் | 60 புள்ளி | 100 புள்ளி |
| | பகுதி II—செயல்முறை வேலை | | 40 புள்ளி | |
| | | | மொத்தம் | 500 புள்ளி |

(ii) பரீட்சையில் சித்தியெய்துவதற்கு ஒரே தடவையில் ஐந்து பாடங்களிலும் சித்தியெய்தல் வேண்டும்.

13. **பெறுபேறுகள்.**—பரீட்சைக்குத் தோன்றிய எல்லாப் பரீட்சார்த்திகட்கும் அவரவர் சித்தியடைந்த, சித்தியடையாத பாடங்களைக் குறிக்கும் பெறுபேற்று அட்டவணைகள் தபால்மூலம் அனுப்பிவைக்கப்படும்.

14. **தராதரப் பத்திரங்கள்.**—பரீட்சையிற் சித்தியெய்திய பரீட்சார்த்திகளுக்குப் பாடசாலைகளில் ஆசிரியர்–ஆலோசகர்களாகக் கடமையாற்றும் தகுதிக்குரிய தராதரப் பத்திரங்கள் வழங்கப்படும். ஆனால், மகாகல்வியதிபதி தேவையெனக் கேட்டுக்கொண்ட யாவும் செய்து முடித்த பின்னரே சித்தியெய்திய பரீட்சார்த்திக்குத் தராதரப் பத்திரம் வழங்கப்படும்.

15. **பாடத் திட்டங்கள்.**—கல்வி அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்ட பயிற்சி நிலையங்களில் சேவைப்பயிற்சி நெறியிற் சேர்ந்து பயிற்சி பெறுபவர்கள் பாடத்திட்டத்துக்குத் தமது விரிவுரையாளருடன் தொடர்பு கொள்ளுதல் வேண்டும்.

16. **பிரமாணங்களில் மாற்றங்கள்.**—பரீட்சையைப் பற்றி அறிவித்தல் செய்யும்பொழுது இப்பிரமாணங்களில் ஏதாவது குறிப்பிட்ட மாற்றங்கள் செய்யப்படின் அவை பத்திரிகைமூலம் அறிவிக்கப்படும். அவ்வித திருத்தங்கள் ஒரே தனிப்பட்ட திருத்தவிதழாக அல்லது முழுப் பிரமாணங்களும் திருத்தப்பட்டதாகப் பிரசுரிக்கப்படும்.

17. **வேறு குறிப்புகள்.**—இப்பிரமாணங்களில் குறிப்பிடப்படாதவை எவையேனுமிருப்பின் மகா கல்வியதிபதியுடன் கலந்தாலோசிப்பதற் கிணங்க, பரீட்சாதிகாரியின் தற்றுணிபின்படி தீர்மானிக்கப்படும்.

பரீட்சைத் திணைக்களம்,
கொழும்பு 2,
1974 ம் ஆண்டு நொவெம்பர் மீ 04 ந் உ.

போகொட பிரேமரத்ன,
பரீட்சை ஆணையாளர்.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்**

ஆசிரியர்—ஆலோசகர் தராதரப் பத்திரப் பரீட்சை

**பிரவேச விண்ணப்பப் படிவம்**

வருடமும் :.......................... ஆணு/பெண்ணு :..........................

1. பெயர்
(அ) வழக்கமான கையொப்பம் :——————
(ஆ) முதலெழுத்துக்களுடன் சாதாரண உபயோகத்திலுள்ளது :——————.
(இ) எல்லா முழுப் பெயர்களும் :——————.

(கந்தோர் உபயோகத்துக்காக)
..................
சுட்டிலக்கம்

2. இப்பொழுது கடமையாற்றும் பாடசாலை/கல்லூரி :——————.
3. சொந்த விலாசம் :——————.
4. பரீட்சைக்குத் தோற்றும் மொழி :——————.
5. பரீட்சை ஸ்தானம் :——————. (i) .......................... (ii) ..........................
6. தராதரப் பத்திர விபரங்கள் :
பட்டம் :.................... சர்வகலாசாலை :.......................... வருடம் :..........................
பட்டத்துக்குப் பின்னர் பெற்ற பயிற்சி :——————.
பயிற்சி நிலையத்தின் பெயர் :.................................................. வருடம் :..........

பயிற்றப்பட்ட ஆசிரியர் தராதரப்பத்திரம்
மொழி :..............................
பயிற்சி நிலையம் :..............................
தராதரப்பத்திர இலக்கம் :..............................
தராதரப் பத்திரம் வழங்கப்பட்ட திகதி :..............
முதலாம் வகுப்பு தராதரப் பத்திரத்திற்கு உயர்த்தப் பட்ட தேதி :.............................. ..............இல் இருந்து .............. வரை

7. இப்பொழுது கடமையாற்றும் பாடசாலையில் சேவைக்காலம் :——————.
8. சேவையிலிருக்கும்பொழுது தொழில்முறை வழிகாட்டலில் பெற்ற பயிற்சி :
இடம் :.......................... காலம் :................ ................ இல் இருந்து ................ வரை
விரிவுரையாளரின் பெயர் :..............................................
9. கட்டணம் :

**முத்திரைகள் ஒட்டுவதற்கான அமைப்பு**

| |
|---|
| கட்டணம்—(25 ரூபாவுக்குரிய வருமான முத்திரையை இதில் ஒட்டிப் பரீட்சார்த்தி தனது ஒப்பத்தையும் திகதியையுமிட்டு இவற்றைப் பயனற்றதாக்க வேண்டும். ஒப்பமானது பாதி தாளிலும் பாதி முத்திரையிலும் விழக்கூடியதாக ஒப்பத்தை இடல் வேண்டும்.) |

மேலே ஒட்டப்பட்ட முத்திரைகள் சுத்தமானவையென்றும், முன்னர் உபயோகிக்கப்படாதவையென்றும் நான் உறுதிப்படுத்துகிறேன். பரீட்சாதிகாரியால் வகுக்கப்பெற்ற பரீட்சார்த்திகளுக்காய விதிகளுக்கமைவேன் எனவும் ஒப்புக்கொள்கிறேன்.

பரீட்சார்த்தியின் ஒப்பம் :..............................................
திகதி :..............................

பரீட்சார்த்தியின்/கல்லூரித் தலைமையாசிரியரின் உறுதிக்கூற்று :

திரு./திருமதி/செல்வி.................................................. என்பவர் அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர் குழுவில் உள்ளாரெனவும் 6 ஆம் 7 ஆம், அடைப்புகளில் தரப்பட்டுள்ளவற்றைப் பரிசீலனை செய்தேனெனவும் அவை சரியெனவும் உறுதிப் படுத்துகிறேன். எனது முன்னிலையில் இவர் இட்ட ஒப்பத்துக்குச் சான்று பகர்கிறேன்.

பரீட்சார்த்தியின் கையொப்பம் :..............................
கல்லூரித் தலைவரின் ஒப்பம் :..............................
திகதி :..............................

கல்லூரி :..................................................................................
விலாசம் :..................................................................................

B 4 ඉ

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

**பரீட்சார்த்திகள் கவனிக்கவேண்டிய விதிகள்**

எல்லா பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும். விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சாதிகாரியின் விரசின்படி கீழ்க்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர் :—

(i) முழுப் பரீட்சையிலிருந்தும் நிறுத்தி வைக்கப்படுவர் அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்தி வைக்கப்படுவர். அல்லது ஒரு பாடத்திலிருந்தோ அதன் ஒரு பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர்.

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர்.

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றுதவாறு தடுத்துவைக்கப்படுவர்.

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றுதவாறு தடுத்துவைக்கப்படுவர்.

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்தமுடியாமற் தடுத்துவைக்கப்படுவர்.

(vi) பரீட்சார்த்தியின் நடத்தைபற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விஷயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்துவிடல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுது, பரீட்சைக்குப் பின்னரோ, தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமென பரீட்சாதிகாரி தீர்மானித்தால், அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும் ; எனினும் அரசாங்க சேவைக்குப் பரீட்சாத்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரச சேவைகள் ஆலோசனைச் சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

விதிகள்

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் பொழுதும் வெளியேறும் பொழுதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்து கொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும் பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரதும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவி செய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்திற் பூரண அமைதி நிலவச் செய்யவேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றப் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியான நிலையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்கு செய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமுஞ் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்கு செய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்படமாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந் தாளையோ வேறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக் கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடையெழுதுந் தாளும் பொருட்களும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரைமணித்தியாலத்துக்குப்பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார். இந்த நேர எல்லை கழிந்தபின்னர்தான் பரீட்சாரத்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேகவும் அனுமதிக்கப்படுவர் ; செய்கைமுறை அல்லது வாய்மொழிப் பரீட்சையைப் பொறுத்தவரையில் தாமதித்து வந்த ஒரு பரீட்சார்த்தியை, மேற்பார்வையாளர் பரீட்சை மண்டபத்துள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு மாறாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்து கொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப்புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலும் சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காக் கீறிவிட வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எதனையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டி விடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கான எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கைவழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகளிருந்தால், சித்திரத்தில் அலங்காரரூபச் சித்திரமும் கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களை விட வேறு தாள்களையோ வைத்திருக்கக்கூடாது. தேவைக்கு வேண்டியமாதிரி வர்ணப்பெட்டியையோ கணிதக்கருவிப் பெட்டியையோ விட கைப்பை, அழகுசெய் செப்பு, பார்சல் முதலியவற்றை கோவை அட்டை, கடதாசிமட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப் பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்குள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்துள்ளிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகமோ குறிப்புகளோ வைத்திருக்கக்கூடாது. மேற்பார்வையாளருக்குத் தேவையெனக் கண்டால் ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தை விட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பங்களிலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும், அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பார். ஆனால், பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும் மீண்டுவரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

14. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவி செய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறு ஒருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொருதாளும் எழுதப்படும் தாளின் கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்கு மேல்விடக்கூடாது.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மைபற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல் பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களை சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிகை செய்யப்படுகின்றனர.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் ஒரு பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும். பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி மேல்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும் :—

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிப்பிட்ட நேரத்திலும் பார்க்க முறைந்தபட்சம் 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்னாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப்பற்றியோ தோற்றுதற்குரிய தகுதியைப்பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்கு முன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ளவேண்டும். அல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்துக்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப் பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர்கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப் பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடின் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படக்கூடும். உண்மைபற்றிய சான்றுப் பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத் தாள், ஒற்றுத்தாள், கணனரேகைத் தாள், பேரேட்டுத் தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால், அதைப்பற்றி, மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக்கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுபட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக் கட்டிகள், நீர் வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதிசெய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதும் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவும் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில், ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்கும் பின்னர் ஒரு கோடு கீறப்படவேண்டும் அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றேடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடது பக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு பரீட்சகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமான கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளின் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டுருபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்கவேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டுருபத்தை அல்லது சிறு படத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளின் மறுபக்கத்திலும் தொடரப்படுமானால், அவ்வடிவுகள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிபிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாளைக் கவனமாக் ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்று சேர்த்து இடது பக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள்பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களை நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும்வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத்தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம்பற்றியும் சேவகனிடமோ பணியாளிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சைத் திணைக்களம்,
மலே வீதி, கொழும்பு 2.

போகொட பிரேமரத்ன,
பரீட்சை ஆணையாளர்.

11–531—15.11.74 ந் திகதிய வர்த்தமானி இல. 138

---

### இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

*கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) ப் பரீட்சை—ஏப்பிரல் 1975*

*1. பரீட்சை ஆரம்பிக்கும் திகதி :—*

இப் பரீட்சை 1975 ஆம் ஆண்டு ஏப்பிரல் 04 ஆம் திகதி ஆரம்பமாகும்.

*2. பாடசாலைப் பிரவேச அட்டவணைகள் :—*

1974 ஏப்பிரல் பரீட்சைக்கு பரீட்சார்த்திகளைத் தோற்றுவித்த சகல பாடசாலைகளிற்கும் பிரவேச அட்டவணைகள் அனுப்பப்படும். 20.11.1974 க்கு முன் பிரவேச அட்டவணைகளைப் பெறாத பாடசாலைத் தலைவர்கள் தமது பாடசாலையிலிருந்து இப் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் பரீட்சார்த்திகளின் எண்ணிக்கையைக் குறிப்பிட்டு இத் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு தேவையான பிரவேச அட்டவணைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

முதற் தடவையாக பரீட்சார்த்திகளைத் தோற்றுவிக்கும் பாடசாலைத் தலைவர்கள் க. பொ. த. ப. (உயர்தர) வகுப்புக்களை நடத்துவதற்குப் பிரதேசக் கல்விப் பணிப்பாளரினால் அனுமதி வழங்கப்பட்ட கடிதத்தின் பிரதியுடன் தோற்றவிருக்கும் இப் பரீட்சார்த்திகளின் எண்ணிக்கையையும் குறித்து இத் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு பிரவேச அட்டவணைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

*3. தனிப்பட்ட விண்ணப்பப் பத்திரங்கள்*

விண்ணப்பப் பத்திரங்களைத் தபால் மூலம் பெற விரும்பும் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் ஒவ்வொருவரும் தமது முகவரி எழுதப்பட்டதும், எஸ்ஜீ 5 என இடதுபக்க மூலையில் எழுதப்பட்டதும், முத்திரை ஒட்டப்படாததுமான நீண்ட தபால் உறைகளை அனுப்பி வைத்தல் வேண்டும். (மேற்கூறிய இலக்கத்தை தபாலுறையில் எழுதும் விடயத்தில் விசேட கவனம் காட்டப்படல் வேண்டும்.) 1974 நவெம்பர் 20 ஆம் திகதி வரை மாத்திரமே தபால் மூலம் விண்ணப்பப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும். 1974.12.09 தொடக்கம் 1974.12.13 வரையும் விண்ணப்பப் பத்திரங்களை பரீட்சைத் திணைக்களத்துக்கு நேரில் வந்து விசாரணை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

*4. இப் பரீட்சைக்குப் பழைய விண்ணப்பப் பத்திரங்களை உபயோகித்தல் கூடாது.*

எல்லா விண்ணப்பங்களும் பரீட்சை ஆணையாளர், பரீட்சைத் திணைக்களம், மலே வீதி, கொழும்பு 2 என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். (கலை, விஞ்ஞானம்) எல்லாப் பாடங்களுக்கும் விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் கடைசித் திகதி 1974.12.16 ஆந் திகதியாகும்.

*5. செய்முறை வேலை—விஞ்ஞான பாடங்கள்—தனிப்பட்ட பரீட்சார்த்திகள்.—*

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) ப் பரீட்சையில் விஞ்ஞானப் பாடங்களுக்குத் தோற்றும் தனிப்பட்ட பரீட்சார்த்திகள், கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட விஞ்ஞான ஆய்வுகூடமுள்ள நிறுவனமொன்றிலிருந்து ஐந்து (5) தவணைக்களுக்குக் குறையாது செய்முறை வேலைகள் செய்துள்ளார்களென அத்தாட்சி பெறுதல் வேண்டும். தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு வழங்கப்படும் விண்ணப்பப் பத்திரத்திலேயே இதற்கான இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

மேற்கூறிய நிபந்தனையைப் பூர்த்தி செய்த பரீட்சார்த்திகள், இப் பரீட்சையில் விஞ்ஞான பாடங்களுக்குத் தோற்றலாம். அவர்கள் பரீட்சை ஆணையாளரிடமிருந்து விசேட அனுமதி எதுவும் பெறத் தேவையில்லை.

பரீட்சைத் திணைக்களம்,
மலே வீதி,
கொழும்பு 2,
1974 ஒக்டோபர் 25.

போகொட பிரேமரத்ன,
பரீட்சை ஆணையாளர்.

11-471—15.11.74 ந் திகதிய வர்த்தமானி இல. 138

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழே குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

**அட்டவணை 1974**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| நவெம்பர் | .. | 01.11.74 | வெள்ளி | .. | 23.10.74 | புதன் | 12 மதியம் |
| | | 08.11.74 | வெள்ளி | .. | 29.10.74 | செவ்வாய் | 12 மதியம் |
| | | 15.11.74 | வெள்ளி | .. | 06.11.74 | புதன் | 12 மதியம் |
| | | 22.11.74 | வெள்ளி | .. | 12.11.74 | செவ்வாய் | 12 மதியம் |
| | | 28.11.74 | வியாழன் | .. | 20.11.74 | புதன் | 12 மதியம் |
| டிசெம்பர் | .. | 06.12.74 | வெள்ளி | .. | 27.11.74 | புதன் | 12 மதியம் |
| | | 13.12.74 | வெள்ளி | .. | 04.12.74 | புதன் | 12 மதியம் |
| | | 20.12.74 | வெள்ளி | .. | 11.12.74 | புதன் | 12 மதியம் |
| | | 27.12.74 | வெள்ளி | .. | 18.12.74 | புதன் | 12 மதியம் |

எஸ். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1974 ம் ௵ சனவரி ௴ 01 ந் ௳.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது